பக்கங்கள்: பன்னிரண்டு

# உதயன்

Registered as a Newspaper

விலை
ரூபா
7.00

சுடர்17 வள்ளுவர் ஆண்டு 2033 ஆவணி 03 திங்கட்கிழமை (19-08-2002) UTHAYAN - A Lively National Tamil Daily கதிர்:267

## முல்லை – வாகரை இடையே கடற் போக்குவரத்து ஆரம்பம்

### 150 புலிகள் நேற்றுப் பயணம்

மட்டக்களப்பு,ஓக.19

இலங்கை அரசுடன் காணப்பட்ட இணக்கத்திற்கு அமைவாக விடுதலைப் புலிகளின் ஆதிக்கத்தில் உள்ள ஒரு பிரதேசத்திலிருந்து புலிகளின் ஆதிக்கத்தில் உள்ள மற்றொரு பிரதேசத்துக்கான கடல்வழிப் போக்குவரத்து நேற்று ஆரம்பமானது.

நான்கு படகுகளில் 150 விடுதலைப் புலிகள் முல்லைத்தீவிலிருந்து நேற்றுக் காலை வாகரை நோக்கிப் புறப்பட்டனர்.

இந்த நான்கு படகுகளில் ஒவ்வொன்றிலும் கண்காணிப்புக் குழு உறுப்பினர் ஒவ்வொருவர் பயணம் செய்தனர்.

முல்லைத்தீவில் இந்தப் படகு

(12 ஆம் பக்கம் பார்க்க)

## புலிகள் இயக்கம் மீதான தடை நீக்கம் 2 ஆம் திகதி வர்த்தமானி அறிவித்தல்!

தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கம் மீதான தடையை நீக்கும் அறிவித்தல் அநேகமாக எதிர்வரும் 2 ஆம் திகதி வெளியாகும் வர்த்தமானியில் பிரசுரிக்கப்படும். பாதுகாப்பு அமைச்சர் இது தொடர்பான அறிவித்தலை வர்த்தமானியில் விடுப்பார் எனத் தெரிகின்றது.

அரசுக்கும் - புலிகளுக்கும் இடையில் தாய்லாந்தில் நடைபெறவிருக்கும் நேரடி - பூர்வாங்க - பேச்சுக்களுக்கு பத்து நாள்களுக்கு முன்னர் விடுதலைப் புலிகள் மீதான தடை நீக்கப்படும் என்று அரசுத்தரப்பில் உறுதிமொழி வழங்கப்பட்டிருந்தது.

இப்போது தாய்லாந்து பேச்சுக்கள் செப்ரெம்பர் 12ஆம் திகதிக்கும் 17 ஆம்திகதிக்கும் இடையில் நடைபெறும் என அறிவிக்கப்பட்டுள்ள சூழ்நிலையில் அரசுத் தரப்பில் வழங்கப்பட்ட உறுதி மொழியை நிறைவேற்றும் விதத்தில் எதிர்வரும் 2ஆம் திகதியன்று புலிகள் மீதான தடை நீக்கப்படுவதாக அதிகார வட்டாரங்கள் தெரிவித்தன.

1998 ஜனவரியில் கண்டித் தலதா மாளிகை மீது இடம்பெற்ற தாக்குதலை அடுத்து விடுதலைப் புலிகள் இயக்கம் மீது தடைவிதிக்கப்பட்டது. (ம)

# ஜனாதிபதியை அவருடைய கட்சியினரே நம்பவில்லை!

## அவரின் அதிகாரத்தை வெட்ட அரசுக்கு எதிரணி வாக்குகள் 19தான் தேவை; ஆனால் 35 எம்.பிக்களுக்கு மேல் ஆதரவு

கொழும்பு,ஓகஸ்ட்19

**ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவை அவரது கட்சிக்காரர்களே இப்போது நம்பவில்லை. அதனால் நாடாளுமன்றத்தைத் தன்னிச்சையாகக் கலைக்கும் அவரது அதிகாரத்தை வெட்டுவதற்கு அரசு கொண்டுவரவிருக்கும் அரசமைப்புத் திருத்தத்தை ஆதரித்து வாக்களிக்க 35இற்கு மேற்பட்ட பொது மக்கள் ஐக்கிய முன்னணி எம்.பிக்கள் தயாராகி விட்டார்கள். ஆனால் அரசமைப்புத் திருத்தத்தை நிறைவேற்றுவதற்கு அரசுக்கு எதிரணியினர் 19 பேருடைய வாக்குளே போதும்.**

அரசும் புலிகளும் பேசி இனக்கத் தீர்வுக்கு வரும் பட்சத்தில் அதை நடைமுறைப்படுத்துவதற்கு நாடாளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பெரும்பான்மை வாக்குகளால் தீர்மானம் நிறைவேற்றவேண்டும்.

அதற்கிடையில் ஜனாதிபதி தனக்கு அரசமைப்பு மூலம் வழங்கப

(11 ஆம் பக்கம் பார்க்க)

## அரசமைப்புத் திருத்த நகல் தயார்!

நாடாளுமன்றத்தைத் தற்றுணிவுப்படி கலைப்பதற்கு ஜனாதிபதிக்கு உள்ள அதிகாரத்தைப் பறிக்க வகை செய்யும் அரசமைப்புத் திருத்தச் சட்ட மூலம் தயாராகிவிட்டதாக விடயமறிந்த விட்டாரங்கள் கூறுகின்றன.

இந்த அரசமைப்புத் திருத்தத்தை ஆதரிப்பதாகப் பிரதமரிடம் நேரில் உறுதி தெரிவித்திருக்கும் எதிரணியைச் சேர்ந்த பொ.ஐ.முன்னணி எம்.பிக்கள மற்றும் முஸ்லிம் காங்கிரஸ், இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ், தமிழர் கூட்டமைப்புப் பிரதிநிதிகள் ஆகியோரின் பரிசீலனைக்கு இந்த அரசமைப்புத் திருத்தச் சட்ட நகல் பெரும்பாலும் இன்று கையளிப்படும் எனத் தெரிய வருகின்றது.

நாளைமறுதினம் அல்லது 28 ஆம் திகதி நடைபெறவிருக்கும் அமைச்சரவைக் கூட்டத்தில் இந்த நகல் ஆரா

(02 ஆம் பக்கம் பார்க்க)

## ஜனாதிபதி திடீர் லண்டன் பயணம் அரசியல் நெருக்கடி முற்றுகின்றது!

கொழும்பு,ஓக.19

ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க நேற்றுமுன்தினம் அதிகாலை திடீரென லண்டன் புறப்பட்டுச் சென்றார்.

அதிகாலை 3 மணிக்கு 'எமிரேட்ஸ்' விமான சேவை மூலம் அவர் பயணித்தார்.

தனிப்பட்ட விஜயம் ஒன்றை மேற்கொண்டு ஜனாதிபதி வெளிநாடு சென்றிருப்பதை அவரின் ஊடகப் பணிப்பாளர் ஜனதாஸ பீரிஸ் உறுதிப்படுத்தினார்.

ஜனாதிபதி எப்போது நாடு திரும்புவார் என்ற விவரம் வெளியிடப்படவில்லை.

அரசுக்கும் ஜனாதிபதிக்கும் இடையிலான அரசியல் நெருக்கடி முற்றி வரும் இவ்வேளையில், ஜனாதிபதி திடீரென லண்டன் பயணமாகியிருப்பதால் அரசியல் நெருக்கடி மேலும்

(02 ஆம் பக்கம் பார்க்க)

## நாடாளுமன்றைக் கலைக்க மாட்டேன் என எழுத்து மூலம் ஜனாதிபதி உறுதிமொழி

### சபாநாயகருக்குக் கடிதம்

கொழும்பு,ஓக.19

நாடாளுமன்றம் இப்போதைக்கு கலைக்கப்படமாட்டாது என்று எழுத்து மூலம் உறுதியளிக்கும் கடிதம் ஒன்றை ஜனாதிபதி குமாரதுங்க சபாநாயகர் ஜோசப் மைக்கல் பெரேராவுக்கு அனுப்பி வைத்திருப்பதாக விடயமறிந்த வட்டாரங்கள் தகவல் வெளியிட்டிருக்கின்றன.

தனிப்பட்ட விஜயமாக லண்டனுக்கு தாம் புறப்பட்டுச் செல்வதற்கு முன்னர் இது தொடர்பான கடிதத்தில் ஜனாதிபதி குமாரதுங்க ஒப்பமிட்டதாகவும், இந்தக் கடிதம் பெரும்பாலும் இன்று காலை சபாநாயகரிடம் ஒப்படைக்கப்படும் என எதிர்பார்க்கப்படுவதாகவும் அவ் வட்டாரங்கள் மேலும் தெரிவித்தன.

உள்துறை அமைச்சர் ஜோன் அமரதுங்கவுக்கு எதிராக எதிர்க்கட்சிகள் சமர்ப்பித்துள்ள நம்பிக்கையில்லாப் பிரேரணை இன்று நாடாளுமன்றத்தில் எடுத்துக் கொள்ளப்படவிருக்கின்றது. இப்பிரேரணையின் மீது மூன்று நாள்களுக்கு அங்கு விவாதம் நடைபெறும்.

இன்று நாடாளுமன்ற அமர்வின் போது நாடாளுமன்றை இப்போதைக்கு

(12 ஆம் பக்கம் பார்க்க)

### சிறுவர் விவகாரங்களுக்கான ஐ.நா.பிரதிநி

## ஒட்டுணுவின் விஜயம் திடீரென ஒத்திவைப்பு!

கொழும்பு,ஓக.19

ஐ.நாவின் விசேட பிரதிநிதியான ஒலரா ஒட்டுணுவின் இலங்கை விஜயம் காலவரையறையின்றி ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

ஆயுத மோதல்கள் மற்றும் சிறுவர்கள் விவகாரங்களுக்கான ஐ.நா. செயலாளரின் விசேட பிரதிநிதியான ஒட்டுணு நேற்று ஞாயிற்றுக்கிழமை இலங்கை வருவார் என்று முன்பு அறிவிக்கப்பட்டிருந்தது.

அவரது ஐந்து நாள் விஜயத்தின போது ஜனாதிபதி, பிரதமர் மற்றும் புலிகளின் தலைவர் பிரபாகரனையும் ஒட்டுணு சந்திப்பார் என்றும் அறிவிக்கப்பட்டிருந்தது.

ஆனால், அவர் ஆபிரிக்காவுக்கான அவசர விஜயம் ஒன்றை மேற்கொள்வதால் இலங்கைக்கு வரவில்லை என்று வெளிவிவகார அமைச்சு வட்டாரங்கள் காரணம் தெரிவித்துள்ளன.

அவரது விஜயம் ஒத்தி வைக்கப்பட்டமை குறித்த உண்மையான பின்னணி பற்றி உத்தியோகபூர்வமாக எதுவும் இன்னும் அறிவிக்கப்படவில்லை.

அண்மையில் புலிகளின் பேச்சாளர் அனரன் பாலசிங்கத்தை அரசுத்தரப்பு பிரதிநிதி அமைச்சர் மிலிந்த மொறகொட சந்தித்த பின்னர் நோர்வே அனுசரணையுடன் வெளியிடப்பட்ட பத்திரிகைச் செய்தியில் ஒலரா ஒட்டுணுவின் உத்தேச இலங்கை விஜயத்தை இரு தரப்பும் வரவேற்றதாக தெரிவிக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

## மட்டக்களப்பு இராணுவத்தளபதி இடமாற்றம்

கொழும்பு,ஓக.19

மட்டக்களப்பு மாவட்டப் பாதுகாப்பு இணைப்பதிகாரியாகக் கடமையாற்றிய கேணல் வி.ஆர்.எல்.அன்ரனீஸ் ராணுவத்தலைமையகத்திற்கு இடமாற்றப்பட்டுள்ளார். ஒழுக்காற்று நடவடிக்கையாக இவருக்கு இந்த இடமாற்றம் வழங்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த ஒழுக்காற்று இடமாற்றத்தை

(12 ஆம் பக்கம் பார்க்க)

## விசாரணைக் குழு அறிக்கைக்கு ஜனநாயகப்பேரவை மறுப்பு!

யாழ்ப்பாணம்,ஓக.19

வேலணையில் விடுதலைப் புலிகளின் தீவகப் பொறுப்பாளர் தாக்கப்பட்ட சம்பவத்துக்கும் மக்கள் ஜனநாயகப் பேரவைக்கும் எந்த விதமான தொடர்பும் இல்லை. இதனை விடுதலைப் புலிகளுக்கும் மக்களுக்கும் பகிரங்கமாகத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறோம்.

- இவ்வாறு மக்கள் ஜனநாயகப் பேரவைத் தலைவரும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான நா. இ.இராமேஸ்வரன் விடுத்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

வேலணையில் விடுதலைப் புலிகள் மீது நடத்தப்பட்ட தாக்குதலுக்கு "கடற்படையின் ஒரு சக்தியே காரணம். ஈ.பி.டி.பியின் உதவியுடன் அல்லது அதிலிருந்து பிரிந்து சென்ற மக்கள் ஜனநாயகப் பேரவையின் துணையுடன் இத்தாக்குதல் மேற்கொள்ளப்பட்டிருக்கலாம்"- என்று இந்தச் சம்பவம் தொடர்பாக விசாரணை நடத்திய குழு விடுத்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருந்ததற்கு பதிலளிக்கும் வகையிலேயே அவர் இந்த அறிக்கையை விடுத்துள்ளார்.

அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

விசாரணைக் குழுவின் அறிக்கை மக்கள் ஜனநாயகப் பேரவையினரான எமக்கு பேரதிர்ச்சியைக் கொடுத்துள்ளது. தமிழீழ விடுதலைப் புலிகளின் ஆதரவுடன் தமிழ்க் கூட்டமைப்பினர் நாடாளுமன்றத்தேர்தலில் நின்றபோது நாம் வேட்புமனுத்தாக்கல் செய்யாது ஒதுங்கி நின்றோம் என்பதை இங்கு சுட்டிக்காட்ட விரும்புகின்றோம்.

(12 ஆம் பக்கம் பார்க்க)

தெல்லிப்பழை துர்க்கா தேவி ஆலய இரதோற்சவத்தை முன்னிட்டு சுன்னாகம் துர்க்கா ஸ்ரேஷனேர்ஸ் வழங்கும் சிறப்பு மலர் நாளை செவ்வாய்க் கிழமை உதயனில் இடம்பெறும்.

# 512 ஆவது படையணிக் கட்டுப்பாட்டில் இருக்கும் நகரிலுள்ள பொதுமக்களின் வீடுகள் சுற்றுலாப் பயணிகளுக்கு வாடகைக்கு!

## ஆனால் உரிமையாளர்கள் செல்ல முடியாது; பிரேமச்சந்திரன் பிரதமர் ரணிலுக்கு கடிதம்

யாழ்ப்பாணம்,ஓக.19

**யாழ்நகரில் 512 ஆவது இராணுவத்தினரின் கட்டுப்பாட்டில் உள்ள பகுதிகளில் இருக்கும் பொதுமக்களின் வீடுகளை தெற்கில் இருந்துவரும் சுற்றுலாப் பயணிகளுக்கு வாடகைக்கு விட்டு படையினர் பணம் சம்பாதிக்கிறார்கள். ஆனால், அந்த வீடுகளில் குடியமர அவற்றின் உரிமையாளர்களுக்கு அனுமதி மறுக்கப்படுகின்றது.**

**- இவ்வாறு பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுக்கு எழுதிய கடிதத்தில் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரும் ஈ.பி.ஆர்.எல்.எவ். (சுரேஷ் அணி) பொதுச் செயலாளருமான சுரேஷ் பிரேமச்சந்திரன் தெரிவித்துள்ளார்.**

அந்தக் கடிதத்தில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

இலங்கை இராணுவத்தின் 512 ஆவது படையணி யாழ்நகரப் பகுதியின் மத்தியில் அமைந்திருக்கிறது. இதன் பாதுகாப்புக் கருதி நகரின் மூன்று முக்கிய வீதிகள் பொதுமக்கள் பாவனைக்கு மூடப்பட்டுள்ளன.

ஆரிய குளம் சந்தியிருந்து யாழ். வைத்தியசாலை வீதி சந்திவரையான வீதி, யாழ்.பஸ்நிலையத்தில் இருந்து வெலிங்டன் தியேட்டர் சந்தி வரையான வீதி, விக்ரோரியா வீதி ஆகியனவே படையினரால் மூடப்பட்டுள்ளன.

இந்த வீதிகளைப் பொதுமக்கள் பாவனைக்காகத் திறந்துவிடுமாறு யாழ். மக்கள் பல தடவைகள் கோரிக்கை விடுத்திருந்தனர். ஆனால், அந்தக் கோரிக்கைகளை படையினர் ஆணித்தரமாக நிராகரித்துவிட்டனர்.

அதன்பின்னர் ஓகஸ்ட் 10 ஆம் திகதி இந்த வீதிகளைத் திறக்கக் கோரி அடையாள எதிர்ப்பு ஆர்ப்பாட்டத்தையும் நடத்தியிருந்தனர்.

படையினரின் கட்டுப்பாட்டில் உள்ள குறிப்பிட்ட பகுதிகளுக்குள் இருக்கும் வீடுகளை படையினர் தற்போது சிங்கள சுற்றுலாப் பயணிகளுக்கு வாடகைக்குக் கொடுக்கிறார்கள்.

அதன்மூலம் பணம் சம்பாதிக்கிறார்கள். அப்பணத்தை தமக்குள் பகிர்ந்துகொண்டு அதில் ஒரு சிறிய தொகையை யாழ்.நாகவிகாரைக்கு தர்மப் பணமாகக் கொடுக்கிறார்கள்.

ஐயா! எங்கள் பகுதிகளிலுள்ள வீதிகளை நாங்கள் பாவிக்கமுடியாது; எங்கள் பகுதிகளிலுள்ள வீடுகளில் சென்று நாங்கள் மீளக்குடியமரமுடியாது. ஏனெனில், அது படையினருக்கு அச்சுறுத்தலாக அமையும். ஆனால், சிங்கள சுற்றுலாப் பயணிகள் அப்பகுதிக்குள் நுழையலாம்; அங்குள்ள வீடுகளில் தங்கலாம்; அதன் மூலம் படையினர் பணம் சம்பாதிக்கலாம். இதனால் எல்லாம் படையினருக்கு அச்சுறுத்தல் இல்லை! இது என்ன விதத்தில் நியாயம்?

எனவே, இவ்வாறான செயற்பாடுகள் மேலும் தொடரவிட முடியாது. அவர்களுக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்குமாறும், அந்த வீதிகளைப் பொதுமக்கள் பாவனைக்காகத் திறந்து விடும்படியும் தங்களிடம் கோருகின்றோம்.

பாதுகாப்பான பிரதேசம் எனக் கருதப்படும் ஓர் இடம் சிங்கள சுற்றுலாப் பயணிகளுக்கு அனுமதிக்கப்படும் போது யாழ்ப்பாணத்தில் உள்ள தமிழ் மக்களுக்கு ஏன் அனுமதி வழங்கப்படக் கூடாது? இது குறித்து தங்களது விரைவான நடவடிக்கையை எதிர்பார்கின்றோம். - என்று அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம)

## மறியற் போராட்டம் குறித்து இன்று கலந்துரையாடல்

ஊர்காவற்றுறை,ஓக.19

ஊர்காவற்றுறை பனை, தென்னை வள அபிவிருத்தி கூட்டுறவுச் சங்கக் கிளை முகாமையாளர், அங்கத்தவர்கள், பொதுமக்கள் ஆகியோர் அண்மையில் தாக்கப்பட்ட சம்பவத்தைக் கண்டித்து ஏற்பாடு செய்யப்பட்டுள்ள மறியற்போராட்டத்திற்கு பொது அமைப்புக்களின் ஆதரவு கோரப்பட்டுள்ளது.

இது தொடர்பான கலந்துரையாடல் ஒன்று இன்று பிற்பகல் 2மணிக்கு ஊர்காவற்றுறை பனை, தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கத்தில் நடைபெறவுள்ளது.

இக் கலந்துரையாடலில் தீவகப் பகுதியில் உள்ள அனைத்து சங்கங்கள், கழகங்கள் மற்றும் பொது அமைப்புக்களின் பிரதிநிதிகளையும் கலந்து கொள்ளுமாறு அவர்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர். (ம-16)

## நாரந்தனைத்தாக்குதலில் தொடர்புபட்ட கடற்படையினர் மீது உரிய நடவடிக்கை

ஊர்காவற்றுறை பனை, தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கத்தின் நாரந்தனைக் கிளைத் தவறணையில் வைத்து சங்கப்பணியாளர்கள் தாக்கப்பட்ட சம்பவத்துடன் தொடர்புடையதாகக் கூறப்படும் கடற்படையினர்மீது உரிய நடவடிக்கை எடுக்கப்படும்.

கடற்படையின் தீவகப் பொதுமக்கள் தொடர்பு அதிகாரி மேற்கண்டவாறு தமக்கு உறுதியளித்துள்ளதாக சங்கத்தின் பொது முகாமையாளர் ம.யோகராசன் தெரிவித்தார்.

இந்தச் சம்பவம் தொடர்பாகத் தமது வருத்தத்தையும் அவர் தெரிவித்தார் என்றும் -

இது போன்ற சம்பவங்கள் எதிர்காலத்தில் இடம்பெறாமல் பார்த்துக் கொள்வதாக உறுதி வழங்கினார் என்றும் - அவர் கூறினார். (ம-3-16)

## ஓய்வுபெறும் வயது 60

அரச உத்தியோகத்தர்கள் ஓய்வுபெறும் காலஎல்லை 55 வயதிலிருந்து 60 வயது வரை அதிகரிக்கப்பட்டுள்ளது.

இவ்வாறு பொது நிர்வாக முகாமைத்துவ, மறுசீரமைப்பு அமைச்சர் வஜிர அபயவர்த்தன தெரிவித்துள்ளார்.

விரும்பி ஓய்வுபெற விரும்புவோர் 55 வயது முடிந்து மூன்று மாதங்களுக்குள் சேவை ஓய்வுக்கு விண்ணப்பிக்கலாம் என்றும் அமைச்சர் தெரிவித்திருக்கின்றார்.

அரசு திணைக்களங்கள் மற்றும் அரசின் நிர்வாகத்துக்கு உட்பட்ட 55 நிறுவனங்கள், கூட்டுத்தாபனங்கள் ஆகியவற்றைப் பட்டியலிட்டு அவற்றுக்கு விடுத்துள்ள அமைச்சரவைத் தீர்மானங்கள் அறிவிக்கும் பத்திரத்தில் இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம)

# விளையாட்டு

## மொரோக்கோ முக்கோணத் தொடர்

## இலங்கை - தென்னாபிரிக்கா இறுதி ஆட்டத்தில் மோதல்

"மொரோக்கோ 2002" கிண்ணத்திற்கான முக்கோணக் கிரிக்கெட் தொடரின் இறுதிப்போட்டிக்கு இலங்கை மற்றும் தென்னாபிரிக்க அணிகள் தகுதி பெற்றுள்ளன.

தனது மூன்றாவது போட்டியில் பாகிஸ்தானை 39 ஓட்டங்களால் இலங்கை அணி தோற்கடித்ததன் மூலம் இறுதிப்போட்டிக்குத் தகுதி பெறுவதற்கான புள்ளிகளை இலங்கை அணிபெற்றது.

கடந்த சனிக்கிழமை நடைபெற்ற இப்போட்டியில் இலங்கை அணி முதலில் துடுப்பெடுத்தாடியது. அணித்தலைவர் சனத் ஜயசூரிய 94 பந்து வீச்சுக்களில் 97 ஓட்டங்களைப் பெற்றார். மஹேல ஜயவர்தன 43 ஓட்டங்களையும், ரஸல் ஆர்னோல்ட் 34 ஓட்டங்களையும் பெற்றனர். 49.5 ஓவர்களில் 242 ஓட்டங்களையும் பெற்ற நிலையில் சகல விக்கெட்டுகளையும் இழந்தது இலங்கை அணி.

வக்கார் யூனுஸ் 43 ஓட்டங்களுக்கு 3 விக்கெட்டுகளையும், வஸீம் அக்ரம், அப்துல் ரஸாக் ஆகியோர் தலா 2விக்கெட்டுகளையும் வீழ்த்தினர்.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய பாகிஸ்தான் அணி 43.4 ஓவர்களில் 203 ஓட்டங்களுடன் சகல விக்கெட்டுகளையும் இழந்தது.

யூஸுப் யுஹானா 91 பந்துவீச்சுகளில் 80 ஓட்டங்களைப் பெற்றார்.9 ஆவது வீரராக களமிறங்கிய சஹீட் அவ்ரிடி 16 பந்துவீச்சுக்களில் 26 ஓட்டங்களைக் குவித்தார். எனினும் அவரால் பாகிஸ்தான் அணியின் தோல்வியைத் தவிர்க்க முடியவில்லை.

இலங்கைப் பந்துவீச்சாளர்களில் புலஸ்தி குணரட்ன 44 ஓட்டங்களுக்கு 4 விக்கெட்டுகளையும், சமிந்தவாஸ் 36 ஓட்டங்களுக்கு 3 விக்கெட்டுக்களையும் வீழ்த்தினர்.

நேற்று நடந்த விறுவிறுப்பான ஆட்டம் ஒன்றில் பாகிஸ்தானைத் தோற்கடித்ததன் மூலம் தென்னாபிரிக்க அணி இறுதிப் போட்டியில் கலந்துகொள்ளும் தகுதியைப் பெற்றுக்கொண்டது.

இந்த வெற்றியின் மூலம் நடைபெறும் இறுதிப்போட்டியில் தென்னாபிரிக்கா இலங்கையை எதிர்த்து விளையாடும். (ம)

## முன்பள்ளி விளையாட்டு விழா

யாழ்ப்பாணம்,ஓக.19

தென்மட்டுவில் தேனொளி முன்பள்ளி சிறார்களின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டிகள் இன்று திங்கட்கிழமை பிற்பகல் 2மணிக்கு முன்பள்ளி மைதானத்தில் தேனொளி மாதர் மன்றத்தலைவி திருமதி க.கணேசன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் தென்மராட்சி பிரதேச செயலர் செ.ஸ்ரீநிவாசன் பிரதம விருந்தினராகவும் தென்மராட்சி முன்பள்ளி கல்விப் பணிப்பாளர் சு.பாக்கியராசா, கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர் க.பராஜ[illegible] ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாகவும் தென்மட்டுவில் கிராம அலுவலர் வே.கந்தையா கௌரவ விருந்தினராகவும் கலந்து கொள்ளவுள்ளனர். (ம-ரி)

## வலிகாமத்தில் 28 பாடசாலைகளில் படையினர் தொடர்ந்தும் உள்ளனர்

யாழ்ப்பாணம்,ஓக.19

வலிகாமத்தில் பலாலி ஆசிரிய பயிற்சிக் கலாசாலை உட்பட 28 பாடசாலைக் கட்டடங்களில் படையினர் இன்னமும் தங்கியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

புரிந்துணர்வு உடன்படிக்கையின்படி 190 நாள்களுக்குள் பாடசாலைகள், பொதுக்கட்டடங்களில் இருந்து படையினர் வெளியேறி இருக்க வேண்டும்.

ஆனால், வலிகாமம் பிரதேசத்தில் படையினர் தங்கியிருந்த பாடசாலைகளில் வசாவிளான் மகாவித்தியாலயம், யூனியன் கல்லூரி, தந்தை செல்வா தொடக்க நிலைப் பள்ளி ஆகியவற்றிலிருந்து மட்டுமே அவர்கள் வெளியேறியுள்ளனர். ஏனைய 28 பாடசாலைகளில் இருந்து அவர்கள் இன்னமும் வெளியேறவில்லை.

கடந்த வெள்ளிக்கிழமை நடைபெற்ற இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்க விசேட கூட்டத்தில் இத்தகவல்கள் தெரிவிக்கப்பட்டன. படையினர் நிலைகொண்டுள்ள பாடசாலைகள் தொடர்பாகவும் இந்தக் கூட்டத்தில் ஆராயப்பட்டது.

ஏற்கனவே படையினர் வெளியேறிய பாடசாலைகள் யாழ். மேலதிக அரச அதிபரிடமே படையினரால் ஒப்படைக்கப்பட்டன. ஆனால், பாடசாலைகள் முறைப்படி வலயக் கல்விப் பணிப்பாளர்களிடமே கையளிக்கப்பட வேண்டுமென சங்கத்தின் பொதுச் செயலர் த.மகாசிவம் அங்கு கருத்துத் தெரிவித்தார். (ம-182)

## சமாதானத்தை வலியுறுத்தி பதுளையில் பேரணி

கொழும்பு,ஓக.19

சமாதானத்தை வலியுறுத்தி பதுளை பேருந்து நிலையமருகே நேற்று ஆர்ப்பாட்டப் பேரணி ஒன்று இடம்பெற்றது.

இனப்பிரச்சினைக்கான தீர்வினைகாண ஜனாதிபதி சந்திரிகா, ஜே.வி.பி.உட்பட சகல தரப்பினரும் பாடுபட வேண்டும் என இந்தப் பேரணியில் வலியுறுத்தப்பட்டது.

## பலாலி கலாசாலை அதிபர் இடமாற்ற ரத்துக்கு அதிருப்தி

### போராடுவோம் எனத் தமிழர் ஆசிரியர் சங்கம் எச்சரிக்கை

யாழ்ப்பாணம்,ஓக.19

பலாலி ஆசிரியர் கலாசாலை அதிபரின் இடமாற்றத்தை ரத்துச் செய்தமை குறித்து இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம் தமது அதிருப்தியை பிரதமருக்குத் தெரிவித்துள்ளது. உடனடியாக அந்த உத்தரவை திருப்பப் பெறாவிட்டால் சங்கம் தொழிற்சங்க நடவடிக்கையில் ஈடுபடும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பாக பிரதமருக்கும் கல்வி அமைச்சருக்கும் சங்கம் அவசர பக்ஸ் செய்தி ஒன்றை அனுப்பி வைத்துள்ளது.

அதில், ஊழல்கள் நிறைந்த அதிபரை இடமாற்றம் செய்துவிட்டுப் பின்னர் நாடாளுமன்ற உறுப்பினர்களின் கோரிக்கைக்காக அதனை இரத்துச் செய்தமையை சங்கம் வன்மையாகக் கண்டிப்பதாகவும் -

அதிபர் உடனடியாக இடமாற்றம் செய்யப்படாவிட்டால் கலாசாலை மட்டத்தில் நேரடித் தொழிற்சங்க நடவடிக்கையில் சங்கம் குதிக்கும் என்றும் - தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம)

## ஜனாதிபதி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மோசமடையக் கூடும் எனக் கருதப்படுகின்றது.

இப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்காக ஜனாதிபதியும் பிரதமரும் அடுத்துவரும் நாள்களில் சந்தித்துப் பேசுவர் என்ற எதிர்பார்ப்பும் ஜனாதிபதியின் லண்டன் பயணத்தால் பொய்த்துப் போய்விட்டதாக அரசியல் வட்டாரங்கள் தெரிவித்தன.

தற்போதைய அரசியல் நெருக்கடிக்குத் தீர்வு காண்பதற்காக ஜனாதிபதிக்கும் பிரதமருக்கும் இடையில் முன்னாள் வெளிவிவகார அமைச்சரும் ஜனாதிபதியின் வெளிவிவகார ஆலோசகருமான லக்ஷ்மன் கதிர்காமர் மேற்கொண்ட முயற்சிகளும் பயனற்றுப் போனதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இதன் காரணமாக, இரு தலைவர்களுக்குமிடையிலான நேரடிச் சந்திப்பு தேவையற்றதாகிவிட்டது என்றும் அவ்வட்டாரங்கள் குறிப்பிட்டன.

## அரசமைப்புத் திருத்த....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

யப்படும் என்றும், அடுத்த மாதத்தில் அது நாடாளுமன்றத்தில் விவாதத்துக்குச் சமர்ப்பிக்கப்படும் என்றும் தெரிகின்றது.

இந்த அரசமைப்புத் திருத்தச் சட்டநகல் உயர் நீதிமன்றத்தின் பரிசீலனைக்கும் அனுப்பி வைக்கப்பட வேண்டும்.

நாடாளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பங்கினரின் ஆதரவோடு இந்தத் திருத்தத்தை நிறைவேற்றலாம். இத்திருத்தத்துக்கு சர்வஜன வாக்கெடுப்பு நடத்தி மக்களின் அனுமதி பெறவேண்டும் என்பது அவசியமில்லை - என்று உயர் நீதிமன்றம் தீர்ப்பளிக்கும் என அரச வட்டாரங்கள் எதிர்பார்க்கின்றன.

அரசமைப்பின் கீழ் நாடாளுமன்றக் கூட்டத் தொடரை இரண்டு மாதங்களுக்கு ஒத்திவைக்கும் அதிகாரம் ஜனாதிபதிக்கு உண்டு.

ஆகவே, டிசெம்பர் 5 ஆம் திகதிக்கு முன்னர் இரண்டு மாத காலத்துக்கு நாடாளுமன்றை ஒத்தி வைத்துவிட்டு, டிசெம்பர் 5 ஆம் திகதி தாண்டியதும் நாடாளுமன்றை ஜனாதிபதி கலைத்து விடவும் வாய்ப்புண்டு என அரசுத் தரப்புக் கருதுகின்றது.

அதனால் ஒக்ரோபர் 5 ஆம் திகதிக்கு முன்னரே - டிசெம்பர் 5 ஆம் திகதிக்கு இரண்டு மாதம் முன்பாகவே - மேற்படி அரசமைப்புத் திருத்தத்தை நிறைவேற்றி, நாடாளுமன்றக் கலைப்புத் தொடர்பான ஜனாதிபதியின் அதிகாரத்தைப் பறித்து, அரசின் ஸ்திரத்தன்மையை உறுதிப்படுத்திக்கொள்ள அரசுத்தரப்பினர் விரும்புவதாகத் தெரிகின்றது. (10)

அடுத்த 20 ஆண்டுகளில்

# குடிதண்ணீர் பற்றாக்குறையால் 7 கோடி பேர் உயிரிழக்க நேரிடும்!

அமெரிக்க ஆய்வில் தகவல்

நியூயோர்க்,ஓக.19

மக்களுக்குப் போதியளவு குடிதண்ணீர் கிடைக்காமற்போவதால் ஏற்படக்கூடிய நோய்களால் 2020 ஆம் ஆண்டில் உலகில் 7.6 கோடி பேர் உயிரிழப்பார்கள் என்று அமெரிக்காவைச் சேர்ந்த நிறுவனம் நடத்திய ஆய்வில் தெரியவந்துள்ளது.

ஆள்கொல்லி நோயான எயிட்ஸ் நோயால் உலகில் இறக்கக்கூடிய மக்களின் எண்ணிக்கையைவிட இத்தொகை அதிகமாகும்.

கலிபோர்னியாவைச் சேர்ந்த, வளர்ச்சி, சுற்றுச்சூழல், பாதுகாப்பு ஆய்வுகளுக்கான பசுபிக் நிறுவனம் என்ற அந்த அமைப்பு மேற்கூறிய ஆய்வை நடத்தியது.

பாதுகாக்கப்பட்ட குடிதண்ணீர் போதுமான அளவில் கிடைக்காததால், பெரிதும் பாதிக்கப்படுபவர்கள் ஏழை நாடுகளில் வாழும் குழந்தைகள்தான். எனவே, பாதுகாக்கப்பட்ட குடிதண்ணீரை மக்களுக்கு வழங்க விரைந்து நடவடிக்கை எடுக்கவேண்டியது அவசியமாகும்.

பெரிய அளவிலான, கூட்டுக்குடிதண்ணீர் திட்டங்களை விட, பாரம்பரியமாக மக்களால் பராமரிக்கப்பட்டுவரும் நீர்நிலைகளைப் பலப்படுத்துவதற்கே கூடுதல் முக்கியத்துவம் அளிக்கப்படவேண்டும். ஏன் என்றால் பெரிய திட்டங்களைப் பராமரிப்பது கடினமான செயல்.

பல துறைகளில் வளர்ச்சி அடைந்த 20ஆம் நூற்றாண்டில், ஏற்பட்ட பெரிய தோல்வி பாதுகாக்கப்பட்ட குடிதண்ணீரை வழங்க முடியாமைதான். இது வெளியே தெரியாத துயரம். பெரிய குடிதண்ணீர்த் திட்டங்களைச் செயற்படுத்தியதும் இதற்குக் காரணமாகும்.

எனவே, குடிதண்ணீர்த் திட்ட முறையை மாற்றவேண்டும். உள்ளூர் மக்களின் ஒத்துழைப்புடன் சிறிய அளவிலான குடிதண்ணீர்த் திட்டங்களைச் செயற்படுத்தவேண்டும். பாரம்பரிய நீராகாரங்களைப் பலப்படுத்த வேண்டும் என்று அந்த அமைப்பு தனது ஆய்வறிக்கையில் கூறியுள்ளது. (ஓ)

உலக அரங்கில்



தனது தாய்நாடான போலந்துக்கு பாப்பரசர் இரண்டாம் அருளப்பர் சின்னப்பர் விஜயம் மேற்கொண்டுள்ளார். அவருக்கு கிராகோவா விமான நிலையத்தில் படை அணிவகுப்பு மரியாதை வழங்கப்பட்டபோது எடுக்கப்பட்ட படம்.

## ரஜினி - ராமதாஸ் பிணக்கு

சென்னை,ஓக.19

கர்நாடகாவைச் சேர்ந்த மராட்டியரான நடிகர் ரஜினிகாந்த் தமிழக இளைஞர்களை தனது சுயலாபத்துக்காக தவறாக வழிநடத்துகிறார். அவர் தமிழர்களுக்கு எதிரானவர். ஆகவே, பாபா படத்தை தமிழர்கள் பார்க்கக்கூடாது என்று தமிழகத்தின் பாட்டாளி மக்கள் கட்சி நிறுவனத் தலைவர் டாக்டர் ராமதாஸ் கோரியிருந்தார்.

இதனையடுத்து ரஜினி - ராமதாஸ் இடையே உருவான பிணக்கால் தமிழகத்தில் பெரும் பரபரப்பு ஏற்பட்டுள்ளது.

## ரஜினியின் அறிக்கை

இந்த நிலையில் பா.ம.க. நிறுவுநர் ராமதாஸ் மீது சட்டப்படி நடவடிக்கை எடுக்கப்போவதாக நடிகர் ரஜினிகாந்த் தெரிவித்துள்ளார். இது தொடர்பாக ரஜினி வெளியிட்ட அறிக்கை பின்வருமாறு:-

"என்னை வாழவைத்த தெய்வங்களான தமிழக மக்களுக்கும் ரசிகப் பெருமக்களுக்கும் என் அன்பார்ந்த வணக்கம். மூன்றரை வருடங்களுக்குப் பிறகு என்னுடைய படம் திரைக்கு வந்தபின், அப்படத்தைப் பார்க்கக்கூடாது என்று சிலர் தடுக்கும்பொழுது உங்களின் உணர்ச்சிகள் எப்படியிருக்கும் என்பதை என்னால் உணரமுடிகிறது.

"ஆண்டவன் சிலரைப் படைப்பது, அவர்கள் செய்யும் தவறான செயல்களைப் பார்த்து நாமும் செய்யக்கூடாது என்பதற்காகத்தான். பொறுங்கள், அமைதி காத்திடுங்கள். நடந்த, நடந்துகொண்டிருக்கும் எல்லா செயல்களுக்கும் காரணமாயிருக்கும் டாக்டர் ஐயா அவர்களை சட்டபூர்வமாகச் சந்திக்கவிருக்கிறேன்.

"பொதுமக்களே! தாய்மார்களே!! எல்லாத் திரையரங்குகளிலும் தமிழகப் பொலீஸார் முழுப்பாதுகாப்பு அளித்திருக்கிறார்கள். நீங்கள் தைரியமாக குடும்பத்துடன் சென்று படம் பார்க்கலாம்" - என்றுள்ளது. (ஓ)

## வழக்குக்குத் தயார்: பா.ம.க.

"டாக்டர் ராமதாஸை சட்டபூர்வமாகச் சந்திக்கவிருப்பதாக நடிகர் ரஜினிகாந்த் கூறியிருக்கிறார்; அதைச் சட்டபூர்வமாகச் சந்திக்க நாங்களும் தயாராகவிருக்கிறோம். எந்தச் சட்டத்தையும் எந்த நிலையிலும் சந்திக்க நாங்கள் தயார்" என்று பா.ம.க. தலைவர் ஜி.கே.மணி கூறியுள்ளார். இது குறித்து அவர் தெரிவித்திருப்பதாவது:-

"பிரச்சினைக்கு முற்றுப்புள்ளிவைக்க ரஜினி முன்வரவேண்டும் என்று கேட்டிருந்தோம். ஆனால், தனக்காகவும் பாபா பட சுயவிளம்பரத்துக்காகவும் ராமதாஸை சட்டரீதியாகச் சந்திக்கிறேன் என்று மிரட்டுகிற பாணியில் சொல்லியிருப்பது, எரிகிற கொள்ளியில் எண்ணெய் ஊற்றுவதுபோல உள்ளது.

"ரசிகர்களைத் தூண்டிவிட்டு தானும் எரிச்சல் ஊட்டும் வகையில் நடந்துகொண்டால் நாங்கள் எப்படிப் பொறுத்துக்கொள்ளமுடியும்? ரஜினியின் பேச்சையும் செயலையும் வைத்து தமிழகத்துக்கும் தமிழர்களுக்கும் தமிழக முன்னேற்றத்துக்கும் எதிரானவர் அவர் என்பதை உணர்ந்து தமிழ்நாட்டு மக்கள் பேசத்தொடங்கியுள்ளனர். இச்செயலுக்கு இவரே காரணம்." (ஓ)

## முன்னாள் அமைச்சர்களின் வீடுகளில் சோதனை

சென்னை,ஓக.19

முன்னாள் திராவிட முன்னேற்றக் கழகம் அமைச்சர்களின் வீடுகளில் தமிழக லஞ்ச ஒழிப்புத்துறையினர் கடந்த சனிக்கிழமை ஒரே நேரத்தில் அதிரடிச் சோதனை மேற்கொண்டனர்.

பொது ஊழியர்களாக இருந்தபோது அவர்கள் வருமானத்துக்கு மீறிச் சொத்துச் சேர்த்ததற்காக அவர்கள்மீது வழக்குப் பதிவுசெய்ய தமிழக அரசு அனுமதி அளித்தது.

அதனையடுத்து தமிழகத்தில் திராவிட முன்னேற்றக் கழகப் பிரமுகர்களுக்குச் சொந்தமான 29 இடங்களில் சோதனை செய்யப்பட்டன. (ஓ)


270 பேருடன்

## வானில் பறந்த விமானத்தின் உதிரிப்பாகங்கள் கழன்று விழுந்தன

சிங்கப்பூர்,ஓக.19

டென்மார்க் நாட்டில் உள்ள கோபன்கெகன் நகரில் இருந்து சிங்கப்பூருக்கு ஒரு பயணிகள் விமானம் கடந்த வியாழக்கிழமை புறப்பட்டது. இதில் 270 பயணிகள் இருந்தனர். விமானம் புறப்பட்டதும் அதன் இறக்கை மற்றும் என்ஜின் பகுதியில் இருந்து சில பொருள்கள் தரையில் விழுந்தன. இதை கோபன்கெகன் விமான நிலைய ஊழியர்கள் பார்த்தனர். உடனே இதுபற்றி விமானிக்குத் தகவல் கொடுத்தனர்.

இதையடுத்து விமானம் மீண்டும் கோபன்கெகன் நகருக்குத் திரும்பியது. விமானம் பத்திரமாகத் தரை இறங்கியபிறகு நடந்த சோதனையில் விமான இயந்திரத்தின் உதிரிப்பாகங்கள் கழன்று விழுந்தமை தெரியவந்தது. இந்த விமானம் புதியது. இதை வாங்கி 2வாரங்கள்தான் ஆகின்றன. விமான இயந்திர உதிரிப்பாகங்கள் கழன்று விழுந்தது பற்றி விசாரணை நடைபெறுகிறது. (ஓ)



மேற்குக் கரையின் நப்லஸ் நகரில் இருந்து பலஸ்தீனர்கள் வெளியேறுவதை இஸ்ரேலிய இராணுவம் தடைசெய்துள்ளது. நேற்றுமுன்தினம் ஊரடங்கு உத்தரவு தளர்த்தப்பட்டபோது, பலஸ்தீன வயோதிபர் ஒருவர் நடுரோட்டில் அமர்ந்து இஸ்ரேலிய படையினரின் தடை உத்தரவுக்குத் தமது எதிர்ப்பைக் காட்டுவதைப் படத்தில் காணலாம்.

## கானா நாட்டு மன்னராக அனானுக்கு கௌரவம்

'புசுமுரு' பட்டமும் வழங்கப்பட்டது

குமாசி,ஓக.19

ஐ.நா. பொதுச் செயலர் கோபி அனானுக்கு கானா நாட்டின் 'அஷாந்தி' வம்ச மன்னர் என்ற உயரிய அங்கீகாரம் கடந்த சனிக்கிழமை வழங்கப்பட்டது. அதன்மூலம் அவரது சொந்த நாட்டின் சக்திவாய்ந்த பாரம்பரிய ஆட்சியாளர்களில் ஒருவர் என்ற அந்தஸ்து அவருக்குக் கிடைத்துள்ளது.

கானா நாட்டில் 'அஷாந்தி' மன்னர் பரம்பரை ஆட்சி 17 ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் ஏற்பட்டது. இத்தனை ஆண்டுகளில் சாமானியர் ஒருவருக்கு அத்தகைய கௌரவம் அளிக்கப்படுவது இதுவே முதல் முறையாகும்.

இப்போது கானா நாட்டு மன்னராக இருப்பவர் ஓடும் புவோ ஓசெய்டுடு. அவர், அனானுக்கு அரச கௌரவத்தை அளித்து 'புசுமுரு' என்ற பட்டத்தையும் அளித்தார். கானா நாட்டு மன்னருக்கு முடிசூட்டுவிழா நடக்கும்போது அவரிடம் அளிக்கப்படும் வாளைக் குறிக்கும் சொல் 'புசுமுரு' ஆகும். பெருமதிப்பிற்குரிய, கௌரவத்திற்குரிய மனிதர் என்றும் அதற்குப் பொருள் உண்டு.

அரச கௌரவத்தைத் தமக்கு அளித்ததற்காக நன்றி தெரிவித்துக் கொண்டார் கோபி அனான். (ஓ)

## அமெரிக்கச் செயற்கைக்கோள் விண்ணில் இரண்டாகப் பிளந்தது!

வாஷிங்ரன்,ஓக.19

வால்நட்சத்திரம் பற்றி ஆராய்வதற்கு ஆயிரத்து 400 கோடி செலவில் அனுப்பிவைக்கப்பட்ட 'கான்டூர்' செயற்கைக்கோள் விண்வெளியில் இரண்டாக உடைந்து நொறுங்கியது.

அமெரிக்க விண்வெளி ஆய்வு நிறுவனமான 'நாஸா', வால்நட்சத்திரங்கள் பற்றிய ஆய்வுகளை நடத்த 'கான்டூர்' என்ற பெயரில் ஒரு செயற்கைக் கோளை அனுப்பியது. 970 கிலோ எடைகொண்ட 'கான்டூர்' செயற்கைக்கோள் கடந்த ஜூலை மாதம் 3ஆம் திகதி விண்ணில் செலுத்தப்பட்டது.

பூமியில் இருந்து சுமார் 225 கிலோ மீற்றர் உயரத்தில் இது பறந்தது.

பூமியைச் சுற்றிவந்தபடி தரைக் கட்டுப்பாட்டு நிலையத்தின் கட்டளைக்கு ஏற்ப 'கான்டூர்' வெற்றிகரமாகச் செயற்பட்டு வந்தது. ஆனால், திடீரென்று அதனுடனான தொடர்புகள் அற்றுப்போயின.

இந்த நிலையில் 'கான்டூர்' செயற்கைக்கோள் இரண்டாக உடைந்த நிலையில் விண்வெளியில் மெதுவாக சுற்றிக்கொண்டிருப்பது கண்டுபிடிக்கப்பட்டது. அரிசோனாவில் உள்ள 'டெலஸ் கோப்' மூலம் விண்வெளியைப் பார்வையிட்டபோது இது தெரியவந்தது.

"இவை பூமியில் இருந்து சுமார் 4 லட்சம் கிலோ மீற்றர்கள் தூரத்தில் உள்ளன. இரு துண்டுகளும் 250 கிலோமீற்றர் தொலைவில் மிதக்கின்றன. இதில் ஒரு பகுதி "ஒளி வீசும்படியாகக் காட்சி அளிக்கிறது" என்று தகவல்கள் வெளியாகியுள்ளன.

'கான்டூர்' கோள் எப்படி உடைந்து நொறுங்கியது என்று உடனடியாகத் தெரியவில்லை. விண்வெளி பயணத்தின்போது வேறு ஏதாவது விண்கல் மோதி நொறுங்கியதா? அல்லது 'கான்டூர்' கலமே வெடித்துச் சிதறியதா என்று ஆய்வுகள் நடக்கின்றன. (ஓ)

## நேபாளத்துக்கான இந்தியத் தூதர் காலமானார்

காத்மண்டு,ஓக.19

நேபாள நாட்டில் இந்தியத் தூதராகப் பணியாற்றிவந்தவர் ஐ.பி.சிங். இவர் புற்றுநோய் காரணமாக லண்டனில் சிகிச்சை பெற்றுவந்தார். நேற்றுமுன்தினம் அவர் சிகிச்சை பலனின்றி இறந்தார். அவருக்கு வயது 71 ஆகும். (ஓ)

## அடுத்த அதிபர் தேர்தலில் ஹிலாரி கிளின்ரன் போட்டி?

வாஷிங்ரன்,ஓக.19

அமெரிக்காவின் முன்னாள் அதிபர் கிளின்ரனின் மனைவி ஹிலாரி கிளின்ரன், அடுத்த அதிபர் தேர்தலில் போட்டியிடத் திட்டமிட்டுள்ளதாகக் கூறப்படுகின்றது.

அமெரிக்காவில் தற்போது காரசாரமாக விவாதிக்கப்படும் விடயங்களில் இதுவும் ஒன்று. ஹிலாரி கிளின்ரன் தற்போது 'செனட்' உறுப்பினர். அவரது பதவிக்காலம் 2006ஆம் ஆண்டு வரை உள்ளது. அதைப் பாதியிலேயே விட்டுவிடப்போவதில்லை என்று கூறுகிறார் அவர்.

அதேசமயத்தில், அரசியல் வேலைகளில் மும்முரமாகவும் அவர் ஈடுபட்டுவருகிறார்.

ஜனநாயகக் கட்சி வேட்பாளர்கள் 73 பேருக்கு 6 லட்சம் டொலர் வரை உதவி அளித்துள்ளார்.

அதிபர் தேர்தலுக்கான வேட்பாளர்களை அதிகமாக அளிப்பது அயோவா, நியூஹாம்ஷையர் மாகாணங்கள்தான். ஆகவே, இந்த மாகாணங்களின் வேட்பாளர்களுக்கும் அவர் அதிகம் உதவி அளிக்கிறார்.

குடியரசுக் கட்சியினர் தமது கணவரை விமர்சிக்கும்போது பதிலடி கொடுக்கிறார்; புஷ்மீது கடும் தாக்குதல் தொடுக்கிறார்.

அவருக்கு நெருக்கமானவர்களை சந்தித்துக் கேட்டபோது, 2008ஆம் ஆண்டு அதிபர் தேர்தலை மனதில் வைத்தே அவர் செயற்படுகிறார் என்று கூறுகின்றனர்.

கடந்த பெப்ரவரியில் கிளின்ரன் ஆஸ்திரேலியாவுக்குச் சென்றிருந்தார். அதிபர் தேர்தலில் அவரது மனைவி போட்டியிடுவாரா? என்று அப்போது செய்தியாளர்கள் கேட்டனர். 2004ஆம் ஆண்டில் இல்லை என்று கிளின்ரன் பதில் அளித்தார். ஆக, 2008ஆம் ஆண்டு தேர்தலில் ஹிலாரி கிளின்ரன் போட்டியிடும் வாய்ப்பை, குறிப்பாக கிளின்ரன் உணர்த்திவிட்டார் என்று சிலர் கூறுகின்றனர். (ஓ)

# சின்னஞ்சிறு விளம்பரம்

## விற்பனைக்கு

Sony 19", 21" National 18" 19" T.V.க்கள் RX National Sony FH7 றேடியோக்கள் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: 142, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். (7187)

PRIMA புறொயிலர் குஞ்சுகள், PRIMA சிவப்பு, வெள்ளை பேட்டுக் குஞ்சுகள் GREEN VALLY புறொயிலர் குஞ்சுகள் இன்று (19.08.2002) மாலை 5 மணிக்கு பெற்றுக்கொள்ளலாம். தொடர்பு: வை.சிவகுமார், 461, நாவலர் வீதி (அத்தியடிச் சந்தி), யாழ்ப்பாணம். (7219)

கலர் மீன்கள், புதியரக மாபிள் ஸ்ரார், சில்வர் ஸ்ரார், ஒஸ்கா, பெரிய சிறிய கோல்ட் Fish மற்றும் பல இன மீன்களும் அறுகோணத் தொட்டிகளும் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: 535A, பலாலி வீதி (பெற்றோல் செட் அருகில்), பரமேஸ்வராச் சந்தி, யாழ்ப்பாணம். (7223)

## வீடு விற்பனைக்கு

சங்கரத்தையில் துணைவிச் சந்திக்கும் பத்திரகாளி அம்மன் கோயிலுக்கும் இடையில் 4 அறைகள் கொண்ட கல்வீடு 31/2 பரப்புக் காணியுடன் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: தொ.பே.இல. 01817904. (C/23224)

## வீடு வாடகைக்கு

வைத்தியர் ஒருவருக்கு வீடு வாடகைக்குத் தேவைப்படுகின்றது. நல்லூர், யாழ்ப்பாணம் அல்லது அதனை அண்டிய பிரதேசத்தில் இருப்பது விரும்பத்தக்கது. தொடர்புக்கு: தொலைபேசி இல.:2134. (7210)

## DISSERTATION BINDING

பல்கலைக்கழக மாணவர்களின் ஆய்வுக்கட்டுரைகள், பல்கலைக்கழக நடைமுறைகளுக்கு அமைவாகக் கட்டிக்கொடுக்கப்படும். இரு பிரதிகள் கட்டுவதற்கான கட்டணம் 350/=.

BHARATHI PATHIPPAKAM
OFF-SET PRINTERS
430, K.K.S. ROAD, JAFFNA.
PHONE: 021-3081

## உயர் கல்வி நிறுவனம்

கொடிகாமம்.

A/L Day Class

ஆரம்பம்: 19-08-2002 திங்கள் 7.00 a.m.

HIN. / HIST. } சி.கா.கமலநாதன்

TAM. சு.கருணாநிதி

ECO. மு.வரதராஜன் (7175)

## மணமகன் தேவை

இந்து கௌரவ குடும்பத்தில், செவ்வாய் தோஷமற்ற, மிக அழகான, பயிற்றப்பட்ட, நற்பண்புள்ள ஆசிரியைக்கு (வயது 30, சுவாதி 3ஆம் பாதம்) பொருத்தமான மணமகன் தேவை. மணமகன் ஆசிரியர், அரசாங்க அலுவலர், வங்கியாளர், பொறியியலாளர், டாக்டர் மற்றும் பொருத்தமானவர்கள் உடனடியாக சாதகம் விவரங்களுடன் தொடர்பு கொள்ளவும். விளம்பர இல. 1603, மே/பா உதயன். (7186)

## நாடகம்

"ஒரு கிராமத்துப் பாடசாலை அழைக்கிறது" நாடகத்தை சனிக்கிழமை வானொலியில் கேட்டீர்களா? எங்களது இன்றைய வாழ்க்கையைச் சித்திரிக்கும் நாடகம். 350 நாடகங்கள் எழுதிய அராலியூர் ந.சுந்தரம் பிள்ளையின் நாடகம். (7189)

## ஒத்துமாறல்

யாழ்ப்பாணம் பல்கலைக்கழகத்தில் பௌதிக விஞ்ஞானம் (Physical Science) கற்கைநெறிக்குத் தெரிவான மாணவன் பேராதனை அல்லது கொழும்பில் மேற்படி கற்கை நெறிக்குத் தெரிவான மாணவர் ஒருவருடன் ஒத்துமாற விரும்புகின்றார். கல்வியாண்டு 2002/2003 தொடர்பு: T.P. 01-594569. (7197)

## தெற்குப் பயணிகளுக்கு பனம்பழ மோகம்

தென்னிலங்கையிலிருந்து யாழ்ப்பாணம் வருவோர் இங்கிருந்து பனம்பழங்களை வாங்கிச் செல்வதைக் காணமுடிகிறது.

கொடிகாமம் பொதுச் சந்தையில் பனம் பழம் ஒன்று 10ரூபா வரை விற்கப்படுகிறது. (ஒ-31)

## ஆலயப் பூசைகளை மேற்கொள்ள நடவடிக்கை

அரியாலை.ஓக.19

கடந்த மூன்று வருட காலமாக பூஜை வழிபாடுகள் எதுவும் இன்றி இருக்கும் கொழும்புத்துறை ஸ்ரீ சந்திரசேகரப் பிள்ளையார் கோவில், துண்டி ஐயனார் கோவில் ஆகியவற்றில் மீண்டும் பூஜைகளை நடத்துவதற்கு முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன.

இந்தப் பகுதியில் மக்கள் மீளக் குடியமர்ந்து வருவதை அடுத்து மேற்படி இரு ஆலயங்களிலும் இந்த மாத இறுதிக்குள் பிராயச்சித்த அபிஷேகம் செய்து பூஜை வழிபாடுகளை ஆரம்பித்து வைப்பதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. (ஒ-17)

# முல்லைத்தீவு மாவட்டத்தில் வருமான அதிகரிப்புத்திட்டம்

முல்லைத்தீவு மாவட்டத்தில் வறுமைக்கோட்டின் கீழ் வாழும் மக்களின் வருமானத்தை அதிகரிக்கும் நோக்கில் வருமான அதிகரிப்புத் திட்டத்தினை அந்த மாவட்ட தமிழர் புனர்வாழ்வுக் கழகம் தனது சக நிறுவனங்களின் ஊடாக நடைமுறைப் படுத்தி வருவதாகத் தெரிவிக்கப்பட்டது.

வடக்கு - கிழக்கு அபிவிருத்தி புனர்வாழ்வு நிறுவனம் போஷாக்குக் குறைந்த குழந்தைகளுடைய 20 குடும்பங்களை இனங்கண்டு அவற்றுக்கு தலா 10,ஆயிரம் ரூபா வீதம் வழங்கியுள்ளது.

இவ்வாறே புதுக்குடியிருப்பு அகதிகள் புனர்வாழ்வு நிறுவனம் வறிய 80 குடும்பங்களுக்கு தலா 10,ஆயிரம் ரூபாவீதம் வருமான அதிகரிப்பிற்காக வழங்கப்பட்டுள்ளதாகக் கூறப்படுகிறது.

வறிய குடும்பங்களின் மேம்பாட்டிற்காக சமூகநலக் கொடுப்பனவுகள், மருத்துவ உதவிகள், வறிய மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்கள் போன்ற உதவிகளையும் இந் நிறுவனங்கள் வழங்கவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. (ஓ)

## மரண அறிவித்தல்

### திருமதி கந்தையா யோகம்மா

சாவகச்சேரி, சப்பச்சிமாவடியைச் சேர்ந்த திருமதி கந்தையா யோகம்மா (13.08.2002) செவ்வாய்க்கிழமை கொழும்பில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற கந்தையா - சின்னம்மா தம்பதியரின் அன்பு மகளும் கந்தையாவின் அன்பு மனைவியும் கனகராசா (கனடா), உதயமூர்த்தி (கனடா), ரஜனி (கனடா), கமலரஞ்சினி (சுவிஸ்), கலா ஆகியோரின் அன்புத் தாயாரும் சுதா, திருமதி உதயமூர்த்தி, விக்கினேஸ்வரன் ஆகியோரின் அன்பு மாமியும் திருநாவுக்கரசு, மகாலிங்கம், அன்னலட்சுமி (கனடா) ஆகியோரின் அன்புச் சகோதரியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (20.08.2002) செவ்வாய்க்கிழமை பிற்பகல் 2 மணியளவில் சாவகச்சேரி சப்பச்சிமாவடியில் உள்ள அன்னாரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக சாவகச்சேரி கண்ணாடிப்பிட்டி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
சு.திருநாவுக்கரசு,
சு.மகாலிங்கம்,
(சகோதரர்கள்).

*சப்பச்சிமாவடி,*
*சாவகச்சேரி.*

(C/23219)

## சாவகச்சேரி இந்து மாணவனுக்கு நினைவுப் பரிசு

தெல்லிப்பழை குரும்பசிட்டி கிராம அலுவலர் சங்கத்தினால் வழங்கப்படும் மகாதேவன் ஞாபகார்த்த பரிசு ஜி.சி.ஈ. உயர்தரப் பரீட்சையில் யாழ். மாவட்டத்தில் கணித பாடத்தில் உயர் புள்ளி பெற்ற சாவகச்சேரி இந்துக் கல்லூரி மாணவன் ஜெகதீஸ்வரன குருபரனுக்குக் கிடைத்துள்ளது.

மகாதேவன் நினைவுக் கேடயத்தையும் பணப் பரிசையும் சங்கத் தலைவர் ஆ.சி.நடராசா சாவகச்சேரி இந்துக் கல்லூரி அதிபர் இ.கயிலைநாதனிடம் அண்மையில் கையளித்துள்ளார். கடந்த வருடம்முதல் வழங்கப்பட்டுவரும் இந்த நினைவுப் பரிசு வருடாவருடம் கணிதபாடத்தில் உயர் புள்ளி பெறும் மாணவருக்கு வழங்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஒ-117)

# தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் சிறுவர் இல்லங்களுக்கு அன்பளிப்பு

தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தினால் நடத்தப்படும் சிறுவர் இல்லங்களுக்கு சர்வதேசத் தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தினாலும் பிற நிறுவனங்களினாலும், நலன் விரும்பிகளினாலும் அன்பளிப்புப் பொருள்கள் வழங்கப்பட்டு வருகின்றன.

'புனிதபூமி' சிறுவர் கல்வி நலன் காப்பகத்திற்கும் பாரதி சிறுவர் பராமரிப்பு இல்லத்திற்கும் சர்வதேச தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தினரால் மின்பிறப்பாக்கிகள், தொலைக்காட்சிப்பெட்டிகள், வானொலிப்பெட்டிகள், 'டெக்' என்பன அன்பளிப்பாக வழங்கப்பட்டுள்ளன.

இதேவேளை, 'கொம்பியூட்டர் எக்ஸ்பிரஸ்' நிறுவனத்தினரால் ஆறு சிறுவர் இல்லங்களுக்கு ஆடைகள் அன்பளிப்புச் செய்யப்பட்டுள்ளன. தமிழர் புனர்வாழ்வுக் கழகம் புனித பூமி சிறுவர் இல்லத் தேவைக்காக வாகனம் ஒன்றை அன்பளிப்பாக வழங்கியுள்ளது.

புலம்பெயர்ந்து வெளிநாடுகளில் வசிப்பவர்கள் பலர் தற்பொழுது வன்னிக்கு வந்து புனர்வாழ்வுக் கழகத்தால் நடத்தப்படும் சிறுவர் இல்லங்களை நேரிற்சென்று பார்வையிட்டு தம்மாலான உதவிகளை, உறவுகளை இழந்த சிறுவர்களின் நல்வாழ்விற்காக வழங்கிச் செல்வதாக தமிழர் புனர்வாழ்வுக் கழகம் தெரிவித்தது. (ஓ)


# மக்கள் வங்கியின் தங்கக்கடன் சேவை


## அச்சுவேலி மக்கள் வங்கியிலும்

மக்கள் வங்கியின் சேவைகளில் ஓர் அங்கமான அடகுச்சேவை அச்சுவேலி மக்கள் வங்கிக்கிளையில் எதிர்வரும் (21.08.2002) புதன்கிழமை காலை 10.00 மணியளவில் எமது பிரதேச முகாமையாளர் அவர்களால் சம்பிரதாயபூர்வமாக ஆரம்பித்து வைக்கப்படவுள்ளது என்பதனை வாடிக்கையாளர் அனைவருக்கும் மகிழ்வுடன் அறியத்தருகின்றோம்.

பிரதேச முகாமையாளர்.

(C/23599)


# 31ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்



அமரர்

## அமிர்தலிங்கம் துரைசிங்கம்

*(பிரபல சமூக சேவையாளரும், முன்னாள் பிரபல புகையிலை வியாபாரியும்)*

நாகர்கோவில் வீதி - எழுதுமட்டுவாழ்

| மண்ணில் | விண்ணில் |
|---|---|
| 1913-02-17 | 2002-07-21 |

*நேர்மையின் இருப்பிடமாய்*
*சொல்லுறுதியில் வல்லவராய்*
*பார்போற்றும் சமூக சேவகனாய், குடும்பத்தின் திருவிளக்காய்*
*குவலயம் போற்ற வாழ்ந்தீர், கண்மணிபோல் எமைக் காத்தீர்*
*கல்விதனைப் புகட்டி ஒப்பரிய மக்களாய்*
*ஓங்கு புவிதனில் ஒப்புரவாய் வாழ*
*உழைத்திட்ட எம் தந்தையே உயிருள்ளவரை*
*உமை மறப்போமோ?*

21.07.2002 அன்று இறைவனடி சேர்ந்த எம் குடும்பத் தலைவரின் அந்தியேட்டிக் கிரியைகள் இன்று (19.08.2002) திங்கட்கிழமை காலை 9.00 மணிக்கு பருத்தித்துறை, மருதடி வீரபத்திரர் ஆலய வளாகத்திலும் வீட்டுக்கிருத்திய சபிண்டீகரணக்கிரியைகள் நாளை (20.08.2002) செவ்வாய்க்கிழமை பருத்தித்துறை இல்லத்திலும் நடைபெறும்.

அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் தொடர்ந்து இடம்பெறும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

*பிரிவால் துயருறும்:*
**மனைவி, மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.**

*பிரதான வீதி,*
*(பஸ் டிப்போ அருகில்)*
*பருத்தித்துறை.*

(7220)

உதயன்

## சமாதானத் தீர்வு கிட்ட .....!

"வடக்கு - கிழக்கில் உள்ள சகல இன மக்களின் உரிமைகளையும் உறுதிப்படுத்தும் வகையில் நிரந்தரத் தீர்வு ஒன்று காணப்படும். நாடு பிளவுபடாத வகையில் நிரந்தர சமாதானத்தை எட்டுவதே எமது இறுதி இலக்கு. எத்தகைய பிரச்சினை வந்தாலும் அவற்றுக்கு முகங்கொடுத்து அமைதிவழியில் சமாதானத் தீர்வை அடைவதே அரசின் குறிக்கோள். நாட்டைக் கட்டியெழுப்பும் இந்த நல்ல முயற்சியில் அரசியல் வேறுபாடின்றி சகல கட்சிகளுடனும் ஒன்றுபட்டுச் செயற்பட அரசு தயாராகவுள்ளது."

- இப்படி உறுதிபடத் தெரிவித்திருக்கின்றார் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க. நேற்றுமுன்தினம் திருகோணமலையில் நடைபெற்ற ஐக்கிய தேசியக் கட்சியின் நிறைவேற்றுக்குழுக் கூட்டத்தில் உரையாற்றியபோதே அவர் இவ்வாறு அறுதியிட்டுக் கூறினார்.

"இந்த நல்ல முயற்சியில் அரசுடன் ஒன்றுபட்டு - ஒத்துழைத்து - செயற்பட பொதுமக்கள் ஐக்கிய முன்னணியும், ஜே.வி.பியும் தயாரா?" - என்றும் அவர் கேட்டிருக்கின்றார்.

"நாட்டின் அரசமைப்புக்கு உட்பட்டே வடக்கு - கிழக்கு இடைக்கால நிர்வாகம் உருவாக்கப்படும். அந்த இடைக்கால நிர்வாகத்தை விடுதலைப் புலிகள் ஏற்றால் அது அவர்கள் நாட்டின் அரசமைப்பை ஏற்றதாகக் கருதப்படவேண்டும்" - என்றும் பிரதமர் அங்கு கூறியிருக்கின்றார்.

இலங்கையின் இறைமையையும், தனித்துவத்தையும், ஐக்கியத்தையும், அரசமைப்பையும் விடுதலைப் புலிகள் ஏற்கின்றார்களா, இல்லையா என்பதல்ல இப்போதுள்ள பிரச்சினை.

அவற்றை விடுதலைப் புலிகளும், ஈழத்தமிழர்களும் ஏற்றுக்கொள்ளத்தக்க வகையில் - ஈழத் தமிழர்களின் அபிலாஷைகளை நிறைவுசெய்யும் விதத்தில் - தீர்வுத் திட்டம் ஒன்றை முன்வைப்பதே பிரதானமானதாகும்; இன்றுள்ள முக்கிய பிரச்சினை அதுதான்.

நாட்டின் அரசமைப்புக்குக் கீழ் ஸ்தாபிக்கப்படும் இடைக்கால நிர்வாகத்தை புலிகள் ஏற்றுவிட்டார்கள். ஆகவே, அவர்கள் இலங்கையின் அரசமைப்பை ஏற்று அங்கீகரித்துவிட்டார்கள் என்று ஒருபுறமும் -

புலிகள் தனியான காவல்துறை, நீதிமன்றம், நிர்வாக அலகு என்று நாட்டுக்குள் தனிநாடு நடத்துகின்றார்கள். அந்தப் பிரிவினைவாதிகளுடன் சமரசமா என்று மறுபுறமும் -

ஆளுங்கட்சித் தலைவர்களும், எதிரணியில் இருக்கும் சிங்களத் தீவிரவாதத் தலைவர்களும் தங்களுக்குள் அடித்துக்கொள்வதில் பயனில்லை. இத்தகைய உரைகள் வெறும் அரசியல் 'ஸ்டண்ட்' பேச்சுக்களாகத்தான் இருக்கும். நாட்டின் இனப் பிரச்சினைக்குத் தீர்வுகாண அவை உதவமாட்டா.

விடுதலைப் புலிகளின் தலைவர் வே.பிரபாகரன் தமது அமைப்பின் கொள்கை விளக்க உரையாக வருடந்தோறும் மாவீரர்தின நாளில் ஆற்றும் பேச்சில் குறிப்பிட்டுள்ள ஒரு விடயம் சிங்களத் தலைவர்களுக்கு நல்லதொரு வழிகாட்டலாக இருக்கும் என்று கருதலாம்.

"முழு அளவிலான போர் நெருக்கடியாக வெடித்துள்ள தமிழரின் தேசிய இனப்பிரச்சினை அடிப்படையில் ஓர் அரசியல் பிரச்சினை என்பதை நாம் அறிவோம். இப்பிரச்சினையைச் சமாதான வழிமுறைகள் மூலமாகத் தீர்க்கலாம் என்ற நம்பிக்கை எம்மிடம் உள்ளது. சிங்கள அரசியல் தலைமைகள் உண்மையாக, உறுதியுடன் மனம் வைத்தால் சமாதானமும் இணக்கப்பாடும் சாத்தியமாகும்." - என்று தலைவர் வே.பிரபாகரன் கடந்த மாவீரர்தின உரையில் குறிப்பிட்டது இன்றும் பொருத்தமாக உள்ளது.

சிங்களத் தலைமைகள் அரசியல் வேறுபாடுகளை மறந்து சமாதானத் தீர்வுகாணவரும்படி பிரதமர் ரணில் திருகோணமலையில் விடுத்த அழைப்பை ஏற்று ஒன்றுபட்டு - உறுதியுடன் - உண்மையாக - மனம்வைத்துச் செயற்பட்டால், தமிழ்த் தேசியத் தலைவர் பிரபாகரன் கூறியபடி சமாதானமும் இணக்கப்பாடும் ஏற்படுவது சாத்தியமாகும்.

"தமிழரின் தேசியப் பிரச்சினைக்கு சமாதான வழிமூலம் தீர்வு காணப்பட்டால் தமிழர்களும், சிங்களவர்களும், ஏனைய சமூகத்தினரும் இந்த அழகிய தீவில் ஆனந்தமாக, ஒத்திசைவாக, ஒன்று கூடி வாழமுடியும்" - என்று தலைவர் பிரபாகரன் குறிப்பிட்டதையும் சிங்களத் தலைவர்களுக்கு இங்கு நினைவூட்டுவது பொருத்தமானது.

### பட்டப்பகலில் திருநெல்வேலியில்

# வீட்டினுள் இருந்தவரைக் கூப்பிட்டு சங்கிலியை அபகரித்த திருடர்கள்!

### 'ஹெல்மட்' அணிந்து வந்தனராம்

வலி.வடக்கு,ஓக.19

பட்டப்பகலில் தலைக்கவசம் அணிந்து மோட்டார் சைக்கிளில் வந்த இருவர் வீட்டினுள் இருந்த பெண்ணைக் கூப்பிட்டு, அவரது சங்கிலியை அறுத்துச் சென்ற சம்பவம் திருநெல்வேலிப் பகுதியில் இடம்பெற்றது.

நேற்றுமுன்தினம் சனிக்கிழமை நண்பகல் 12.30 மணியளவில் இத்துணிகரத் திருட்டு இடம்பெற்றுள்ளது.

இச்சம்பவம் தொடர்பாகக் கூறப்படுவதாவது:-

திருநெல்வேலி, கேணியடி ஒழுங்கையில் உள்ள வீடொன்றின் வாசலில் மோட்டார் சைக்கிள் ஒன்று சம்பவதினம் நண்பகல் நேரம் வந்து நின்றது. அதில் இருந்த இருவருமே முகத்தை மறைக்கும் வகையில் தலைக்கவசம் அணிந்திருந்தனர்.

அவர்கள் வீட்டு வாசலில் மோட்டார் சைக்கிளில் அமர்ந்திருந்தபடியே வீட்டுக்குள் நின்ற பெண்மணியை அழைத்தனர். என்ன என்று கேட்க அந்தப் பெண்மணி அவர்கள் அருகே வந்தார்.

மோட்டார் சைக்கிளை செலுத்திவந்தவர், குறிப்பிட்ட ஒரு நபரின் பெயரைக் கூறி, அவரது வீடு எங்கே உள்ளது? என விசாரித்தார். அதில் பெண்மணி கவனத்தைச் செலுத்திய போது, மோட்டார் சைக்கிளின் பின் இருக்கையில் அமர்ந்திருந்தவர் அப்பெண்ணின் கழுத்திலிருந்த தங்கச் சங்கிலியை அறுத்தார். அடுத்த கணமே அவர்கள் இருவரும் மோட்டார் சைக்கிளில் தப்பிச் சென்றுவிட்டனர்.

பட்டப்பகல் வேளையில் இடம்பெற்ற இந்தச் சம்பவம் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியது. (ஓ-86)

# அனுமதியின்றி ஒலிபெருக்கிகளை பாவித்தால் கடும் நடவடிக்கை

### எச்சரிக்கின்றனர் பொலீஸார்

யாழ்ப்பாணம்,ஓக.19

பொலீஸாரின் அனுமதி பெறாமல் ஒலிபெருக்கிகளைப் பாவிப்போர்மீது கடுமையான நடவடிக்கை எடுக்கப்படவிருப்பதாக யாழ்.பொலீஸார் அறிவித்துள்ளனர்.

ஆலயத்திருவிழாக்கள் பொதுக்கூட்டங்கள், கலை நிகழ்வுகள் உட்பட எந்த நிகழ்வுகளிலும் ஒலிபெருக்கிகளைப் பாவிப்பதற்கு அந்தந்தப் பகுதிகளுக்கான பொலீஸ் நிலையங்களில் முன்அனுமதி பெறப்படவேண்டியது அவசியமென்றும் -

வாகனங்களில் ஒலிபெருக்கிகளைப் பொருத்தி வீதிகளில் அறிவித்தல்கள் மற்றும் விளம்பரங்களை மேற்கொள்வோரும் அதற்கான விசேட அனுமதியைப் பெற்றிருக்க வேண்டும் என்றும் - பொலீஸார் வலியுறுத்தியுள்ளனர்.

இந்த நடைமுறைகளைப் பெரும்பாலானவர்கள் மீறி வருவதாகப் பொலீஸார் தரப்பில் தெரிவிக்கப்பட்டது.

பொலீஸ் அனுமதி பெறாமல் ஒலிபெருக்கிகளைப் பாவிப்பவர்கள்மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டது.

இந்த விடயத்தை இறுக்கமான முறையில் கடைப்பிடிக்குமாறு சகல பொலீஸ் நிலையங்களுக்கும் பொலீஸ் தலைமையகத்தினால் சுற்றுநிருபம் ஒன்று அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாகவும் கூறப்பட்டது.

இதேவேளை -

அயலவர்களுக்கு இடையூறு விளைவிக்கும் வகையில், ஒலிபெருக்கிகள் பாவிக்கப்படுவது குறித்து தமக்கு ஏராளமான முறைப்பாடுகள் கிடைத்திருப்பதாகவும் -

ஆகவே நிகழ்வுகளில் குறிப்பாக ஆலயங்களில் தேவையற்ற ஒலிபெருக்கிப் பாவனையைக் கட்டுப்படுத்துமாறும் - பொலீஸார் கேட்டுள்ளனர். (ஓ-4)

# நல்லூர் திருவிழாவையொட்டி படையினரின் 'சைக்கிள் பார்க்'

யாழ்ப்பாணம்,ஓக.19

நீண்ட காலத்தின் பின்னர் சமாதானச் சூழ்நிலையில் இடம்பெறும் நல்லூர் ஆலயத் திருவிழாவை முன்னிட்டு கோயில் வீதியில் அமைந்துள்ள தமது முகாமில் சைக்கிள் பாதுகாப்பு நிலையம் ஒன்றை படையினர் நடத்திவருவதாகக் கூறப்படுகிறது.

'சைக்கிள் பார்க்' என்று ஆங்கிலத்தில் எழுதப்பட்ட அட்டை தொங்கவிடப்பட்டுள்ள இந்த சைக்கிள் பாதுகாப்பு நிலையத்தில் விடப்படும் சைக்கிள்களுக்கு சிறுதுண்டுத் தாளில் இலக்கம் போன்றவை எழுதப்பட்டு சீட்டாக வழங்கப்படுவதாகவும் -

சைக்கிள் ஒன்றுக்கு பாதுகாப்புக் கட்டணமாக இரண்டு ரூபா அறவிடப்படுவதாகவும் - தெரிவிக்கப்பட்டது.

யாழ்.மாநகர முதல்வர் உட்பட மாநகராட்சி அதிகாரிகள் சைக்கிள் பாதுகாப்பு நிலையங்களில் விநியோகிக்கப்படும் சீட்டுகளில் மாநகராட்சி முத்திரை இருக்கவேண்டும் என்றும், சைக்கிளுக்கு ஒரு ரூபா மட்டுமே பாதுகாப்புக் கட்டணமாக அறவிடப்படவேண்டும் என்றும் பல முறை அறிவித்துவரும் நிலையில் மேற்படி பாதுகாப்பு நிலையத்தில் அந்த இரு விதிகளும் பின்பற்றப்படவில்லை என்று கூறப்படுகிறது.

குடாநாட்டில் இராணுவ முகாம்கள் அமைந்துள்ள காரணத்தால் பல வீதிகள் போக்குவரத்துக்கு மறுக்கப்பட்டுள்ள நிலையில், முகாமின் ஒரு பகுதியில் இங்கு வாகனப் பாதுகாப்பு நிலையம் நடத்தப்படுவது குறிப்பிடத்தக்கது. (ஓ-ரி)

### தடுப்பார் எவருமின்றி

# மிருசுவில் பகுதியில் இருந்து கட்டடப் பொருள்கள் திருட்டு!

தென்மராட்சி,ஓக.19

மிருசுவில் படித்த மகளிர் குடியேற்றத்திட்ட வீடுகளில் இருந்து அகற்றப்பட்டதாகக் கருதப்படும் கதவுகள், யன்னல்கள், நிலைகள் போன்றவை வண்டில்களில் ஏற்றப்பட்டு வெளியிடங்களுக்குக் கொண்டுசெல்லப்படுவதாக பொதுமக்கள் கூறினர்.

மக்கள் மீளக்குடியமர அனுமதிக்கப்படாத அப்பகுதிக்குள் மாட்டு வண்டில்களைக் கொண்டு சென்று, இப்பொருள்களை சிலர் ஏற்றி வருவது குறித்து பொதுமக்கள் ஆச்சரியமும் கவலையும் வெளியிட்டுவருகின்றனர்.

இது தொடர்பாக அப்பகுதி கிராம அலுவலரிடம் பொதுமக்கள் சார்பில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளதாகவும் கூறப்படுகிறது.

தென்மராட்சிப் பகுதியில் மக்கள் மீளக்குடியமராத பிரதேசங்களில் கட்டடப் பொருள்களை திருடி வந்து விற்கும் நடவடிக்கை நீண்ட காலமாகவே இடம்பெற்று வருவதாகவும் -

ஆனால் இந்தத் திருட்டில் ஈடுபடும் சமூகவிரோதிகளை தடுப்பதற்கு எவ்வித நடவடிக்கையும் மேற்கொள்ளப்படவில்லை என்றும் -

பொதுமக்கள் விசனம் தெரிவித்தனர். (ஓ-117)

### பிற இடங்களில் கடமையாற்றும்

# சிற்றூழியர்கள் செப்.1 முதல் பளை ஆஸ்பத்திரியில் பணி

தென்மராட்சி,ஓக.19

பளை ஆஸ்பத்திரியில் கடமையாற்றி இடப்பெயர்வின் பின்னர் யாழ்.மாவட்டத்தில் உள்ள ஏனைய ஆஸ்பத்திரிகளில் கடமையாற்றும் 26 சிற்றூழியர்களும் எதிர்வரும் செப்ரெம்பர் முதலாம் திகதிதொடக்கம் மீண்டும் பளை ஆஸ்பத்திரியில் கடமைகளைப் பொறுப்பேற்குமாறு யாழ்.பிராந்திய சுகாதார சேவைகள் பிரதி மாகாணப் பணிப்பாளர் அறிவித்துள்ளார்.

அத்துடன் இந்த ஊழியர்களை பணியிலிருந்து விடுவிக்குமாறு அவர்கள் கடமையாற்றும் வைத்தியசாலைகளின் பொறுப்பதிகாரிகளுக்கும் அவர் அறிவித்துள்ளார்.

பளை ஆஸ்பத்திரியை மீண்டும் இயக்குவதற்கு இந்த ஆஸ்பத்திரியில் கடமையாற்றிய சிற்றூழியர்களை விடுவிக்குமாறு கிளிநொச்சி பிராந்திய சுகாதார சேவைகள் பிரதி மாகாணப் பணிப்பாளர் அண்மையில் யாழ்.பிராந்திய மாகாணப் பணிப்பாளரைக் கோரியிருந்தது. தெரிந்ததே. (ஓ-117)

**நாளை**

ஆவணி 04
செவ்வாய்க்கிழமை
(20.08.2002)
திதி : திரயோதசி
பின்னிரவு 2.45வரை.
நட்சத்திரம்:உத்தராடம்
பின்னிரவு 3.53வரை.
பிரதோஷவிரதம்
சுபநேரம் : 10.35 - 12.05
ராகுகாலம்: 3.05 - 4.35
(பழைய நேரப்படி)

**உதய வாக்கு**

நாவைக் காப்பாற்றாதவன் வாழ்வை இழந்துவிடுவான்.

# சுமார் 17 ஆயிரம் பேருக்கு இதுவரை செயற்கைக்கால்கள்

வடமராட்சி கிழக்கு,ஓக.19

யாழ்ப்பாணத்தில் இயங்கும் செயற்கைக் கால் பொருத்தும் நிலையத்தில் கடந்த 17 வருடங்களில் சுமார் 17 ஆயிரம் பேர் செயற்கை அவயங்களைப் பெற்று பயனடைந்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

நாட்டின் போர்ச் சூழலை அடுத்து 'ஆபத்தில் உதவும் நண்பர்கள் கழகத்தினால்' (The Friends in Need Society) ஆரம்பிக்கப்பட்ட செயற்கைக் கால் பொருத்தும் நிலையத்திற்கு 1992 ஆம் ஆண்டிலிருந்து செஞ்சிலுவைச் சர்வதேசக் குழு நிபுணத்துவ சேவையினை வழங்கி வருகின்றது.

'ஜெய்பூர்' செயற்கைக் கால்களுடன் செஞ்சிலுவைச் சர்வதேசக் குழுவால் அறிமுகம் செய்யப்பட்ட 'பொலிபுறொலின்' கால்களும் இணுவிலில் இயங்கும் வேலைத்தளத்தில் உற்பத்தி செய்யப்பட்டுக் குறைந்த விலையில் வழங்கப்பட்டு வருகின்றன.

படை முகாம்ககள் இருந்த இடங்களிலும், போர்முனைப் பிரதேசங்களிலும், மிதிவெடிகள் உட்பட பல்வேறுபட்ட வெடிபொருள்கள் காணப்படுவதினாலும், தற்போது அப்பகுதிகளில் மக்கள் மீளக் குடியமரத் தொடங்கியுள்ளமையினாலும், இந்நிலையத்தின் சேவை இன்னமும் பல ஆண்டுகள் தேவைப்படலாம் எனக் கருதப்படுகின்றது. (ஓ-182)

# ஆறாம் மாத நினைவஞ்சலி

தோற்றம்
15 - 09 - 1976



மறைவு
24 - 02 - 2002

## அமரர்
## இராஜகோபாலன் சுஜீவன்

குரு வீதி, காங்கேசன்துறை.
(மகாஜனக் கல்லூரி 1995 A/L கணிதப் பிரிவு)

*திதி: 19.08.2002 பூர்வபட்ச துவாதசி*

மண்ணில் மக்கள் வாழ சேவைகள் செய்தீர்
கண்ணை இமை காப்பதுபோல் காத்து நின்றீர்
கண்மூடித் திறப்பதற்குள் தெய்வமானீர்
எண்ணுவார் நெஞ்சத்தில் என்றும் நிறைந்திருப்பீர்.

பிரிவால் துயருறும்:
தந்தை, சகோதரர்கள்,
உறவினர்கள்.

*"மீனஸ்தன்"*
*வளாக வீதி, திருநெல்வேலி.*

(7190)

---

யாழ்ப்பாணம் மாவட்டக் கூட்டுறவுப் பயிற்சிக் கல்லூரி

## விண்ணப்பம் கோரல்

2002 புரட்டாதி மாதம் ஆரம்பமாகவுள்ள கூட்டுறவுப் பணியாளர் தராதரப்பத்திர சாதாரண பிரிவுப் பயிற்சிநெறிக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. விண்ணப்பப்படிவத்தினை ரூபா 10/= செலுத்தி கல்லூரியில் பெற்றுக்கொள்ளலாம்.

***விண்ணப்ப முடிவுதிகதி: 30.08.2002***

கூட்டுறவுப் பயிற்சிக் கல்லூரி,
இல.14, மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம்.

- அதிபர்.

(C/23207)

---

## உடன் தேவை

யாழ்.போதனா வைத்தியசாலை முன்பாக உள்ள டாக்டர் வீடு திக்கு இரு நேரம் சமையல் செய்யவும், துணிகள் கழுவவும் பணிப்பெண் ஒருவர் உடன் தேவை (பகல் நேரம் மட்டும்).

*தொடர்பு:*
**டாக்டர் வி.குணானந்தம்**
*தலைவர்,*
*சத்திர சிகிச்சைத்துறை,*
*யாழ்.போதனா வைத்தியசாலை.*

(7207)

---

## வைத்தியம்

செங்கண்மாரி, அல்சர்,
ஆஸ்துமா, வாதநோய்கள்,
வலிப்பு நோய், பீனிசம்,
தலையிடி, தலைகால்
அவியல், சரும நோய்கள்,
மாதவிடாய்க்குத்து,
இரத்தப்போக்கு,
வெள்ளைக்கசிவு,
கருவழிதல், மகப்பேறின்மை,
குழந்தை வைத்தியம்,
வீரியக்குறைவு,
மூலவியாதிகள்,
மூத்திரரோகங்களில்
பிரபல்யமானவர்.
*சகல வியாதிகளையும்*
*குணப்படுத்துபவர்:*

வேலணை வைத்திய கலாநிதி
**சி.இராசரத்தினம்**
121, 2ஆம் குறுக்குத்தெரு,
யாழ்ப்பாணம்.
*தொலைபேசி எண்: 2459*

(6697)

---

பச்சிலைப்பள்ளி பிரதேச சபை, பளை

## முக்கிய அறிவித்தல்

பச்சிலைப்பள்ளி பிரதேச எல்லைக்குட்பட்ட முகமாலை, புலோப்பளை, முள்ளிப்பற்று ஆகிய உப அலுவலக எல்லைக்குட்பட்ட வதிவிட வாடிக்கையாளர்களுக்கும் வரியிறுப்பாளர்களுக்கும் பின்வரும் விடயங்களைக் கவனத்தில் கொள்வதற்கு இத்தால் அறியத்தருவது:-

1987ஆம் ஆண்டில் 15ஆம் இலக்கப் பிரதேச சபைகள் சட்டத்திற்கமைய குறித்த எல்லைக்குள் சபையின் அனுமதியின்றி நிரந்தரம் அல்லது தற்காலிக கட்டடங்கள், மலசலகூடங்கள், மதிற்சுவர்கள், கிணறுகள் போன்றவற்றைப் புதிதாக அமைப்பதும் அல்லது திருத்த வேலைகள் செய்வதும் சட்டப்படி குற்றமாகும். எனவே, ஏற்கனவே உள்ள நடைமுறைச் சட்டத்திற்கமைய குறித்த வேலைகளைச் செய்பவர் எவராயினும் எனது கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டால் சட்ட நடவடிக்கைக்கு உட்படுத்தப்படுவர் என்பதை அறியத்தருகின்றேன்.

பச்சிலைப்பள்ளி பிரதேசத்தில் மீளக்குடியமர்ந்துவருபவர்கள் புதிதாக ஆரம்பித்துவரும் கடைக்காரர்கள் பச்சிலைப்பள்ளி பிரதேச சபையிடம் 2002ஆம் ஆண்டுக்கான வியாபார உரிமத்தினை 30.09.2002இற்கு முன்பு செலுத்திப் பற்றுச்சீட்டைப் பெற்று சபையுடன் ஒத்துழைக்கும்படி கேட்டுக்கொள்கின்றேன்.

பச்சிலைப்பள்ளி பிரதேச எல்லைக்குள் மணல், மண், கல், ஊரி என்பன ஏற்றுவதாயின் பச்சிலைப்பள்ளி பிரதேச சபையிடம் அனுமதிபெற்று ஏற்றுமாறு கேட்டுக்கொள்கின்றேன்.

பச்சிலைப்பள்ளி பிரதேச சபை எல்லைக்குட்பட்ட பகுதிகளில் வீதி ஓரங்களில் எமது அனுமதியின்றி விளம்பரப் பலகைகள் நாட்ட வேண்டாம் எனக் கேட்டுக்கொள்கின்றேன். அனுமதியற்ற விளம்பரப் பலகைகள் காணப்படின் முன்னறிவித்தல் எதுவுமின்றி அகற்ற சபை ஏற்ற நடவடிக்கை எடுக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

**வே.நவரத்தினம்**
*ஜே.பி.யு.எம்.*
தவிசாளர்,
**பச்சிலைப்பள்ளி பிரதேச சபை,**
*பளை.*

*பச்சிலைப்பள்ளி பிரதேச சபை,*
*பளை.*
*16.08.2002* (சி-23205)

---


## எங்கள் வீட்டின் - எங்கள் குடும்பத்தின் - எங்கள் பயணத்துக்கு பஜாஜ் ஒன்றுதான்





பஜாஜ் - எனது நண்பன்



பஜாஜ் - எனது கைஉதவியாளன்

வீட்டில் ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு விதமான பயணங்கள் உண்டு.
அந்த போக்குவரத்துக்காக வீணாகும் செலவையும், நேரத்தையும், களைப்பையும் குறைப்பதற்கும், அந்த செலவழியும் பணத்தையும் காலத்தையும் சேமித்து அதை எங்களின் குடும்ப முன்னேற்றத்துக்காக பயன்படுத்த எங்களின் பஜாஜ் வண்டியினால்தான் உதவ முடிந்தது.

பஜாஜ் முச்சக்கர வண்டி அன்றுபோல் இன்றும், இன்றுபோல் நாளையும் எங்களின் முன்னேற்றத்துக்கு கைகொடுத்து உதவ எங்களுடன் தொடர்ந்து இயங்கும் என்பது எங்களின் விசுவாசம்.



பஜாஜ் - எனது மூத்தவன்



பஜாஜ் - எனது காவலன்

விலை ரூ.191,350/=இலிருந்து மேல் (எல்லா வரிகளும் அடங்கும்)

### டேவிட் பீரிஸ் மோட்டார் கம்பனி லிமிட்டட்

த.பெ. 1909, 75, ஹைட்பார்க் கோணர், கொழும்பு 02. தொ.பே: 074-700600, பக்ஸ்: 657175

பிரதேச கிளை அலுவலகங்கள்:
- 1748, கட்டுகஸ்தோட்டை வீதி, கண்டி. தொ.பே: 08-225146, 08-238133-5
- 27 E, வியாபார ஸ்தானம், தெகியத்தகண்டிய. தொ.பே: 027-50037
- 382, அனகாரிக்க தர்மபால மாவத்தை, தொ.பே: 041-27488, 041-28488, 041-28999
- நீல் மாவத்தை, அம்பாறை. தொ.பே: 063-22997, 063-23662
- 96, மைத்திரிபால சேனாநாயக்க மாவத்தை, அநுராதபுரம். தொ.பே: 025-22676
- தனசிரி கட்டிடம், இல. 195, பிரதான வீதி, இரத்தினபுரி. தொலைபேசி: 045-22389
- இல. 115, குருணாக்கல் வீதி, புத்தளம். தொ.பே: 032-65527

மேல் விபரங்களுக்கு இக்கூப்பனை நிரப்பி கீழ் குறிப்பிட்ட விலாசத்துக்கு தபாலில் அனுப்பி வையுங்கள்.

பெயர் ______________________

விலாசம் ______________________

சேவை நிலையம் ______________ தொலைபேசி ______________

பஜாஜ் முச்சக்கர வண்டி பற்றிய மேல் விபரங்களை அனுப்பி வையுங்கள்.

(C/23488)

# திருட்டு வாகனச் சந்தையாகும் வடக்கு - கிழக்குப் பிரதேசம்

**நாட்டில் வாகனக் கொள்ளைகள் நாளுக்குநாள் அதிகரித்து வருகின்றன. வாகனத் திருடர்கள் வெவ்வேறு உத்திகளைக் கையாள்கின்றனர். வாகனத் திருடர்களின் இப்போதைய புதிய உத்தி, தாம் கொள்ளையிடும் வாகனங்களை வடக்கு, கிழக்கு பிரதேசங்களில் விற்று விடுவதாகும். இது குறித்து 'லக்பிம' வார இதழில் வெளியான கட்டுரையின் தமிழாக்கத்தை இங்கு தருகிறோம்.**

வாகனத் திருட்டுக்கள் இன்று அதிகரித்திருப்பதாக பொலீஸ் திணைக்களத் தலைமையகத் தரவுப்பதிவேடுகளிலிருந்து அறியமுடிகிறது. கடந்த சில மாதங்களாக நுகேகொட, மட்டக்களப்பு, கொழும்பு, கம்பகா, களனி, மாத்தறை, கல்கிசை, நீர்கொழும்பு ஆகிய பிரதேசங்களில் வாகனத் திருட்டுக்கள் முன்பில்லாத வகையில் அதிகரித்து வருகின்றன.

இவ்வருடத்தின் முதல் ஆறு மாதங்களில் மட்டும் நாட்டில் 225 வாகனத் திருட்டுச் சம்பவங்கள் இடம்பெற்றுள்ளன. இவற்றில் 30 வாகனங்கள் நுகேகொட பொலீஸ் பிரிவிலும், 25 வாகனங்கள் களனிப் பொலீஸ் பிரிவிலும் திருடப்பட்டுள்ளன. அதே சமயம், நுவரெலியா, கந்தளாய் ஆகிய பிரதேசங்களில் வாகனத் திருட்டுகள் எதுவும் இடம்பெறவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

பொலீஸாரின் தகவல்களின்படி கொள்ளையர்களில் பெரும்பாலானவர்கள் இப்போது 'வான்'களைக் கொள்ளையடிப்பதிலேயே அதிக அக்கறை காட்டுவதாக அறிய முடிகிறது. 'வான்'களை விற்பதும், அவற்றைப் பிரித்து உதிரிப்பாகங்களாக்குவதும் இலகுவான காரியங்கள் என்பதே இதற்குக் காரணமாகும்.

தனியார் வாகனமொன்றை வாடகைக்கமர்த்தும் வாகனத் திருடர்கள் பயணிக்கும்போது நடுவழியில் சாரதியைத் துப்பாக்கி முனையில் அல்லது கத்தியைக் காட்டிப் பயமுறுத்தி வாகனத்தைக் கைப்பற்றுவர். அல்லது பாதையில் நிறுத்தி வைக்கப்பட்டிருக்கும் வாகனமொன்றை கள்ளத் திறப்புப் பாவித்துக் களவாடிச் செல்வர். தவிர, சன நடமாட்டமில்லாத பகுதியில் ஒளித்திருந்து அப்பாதையில் செல்லும் வாகனத்தை, தடுத்து நிறுத்தி ஆயுதமுனையில் கடத்திச் செல்வதும் உண்டு.

## மாற்றார் தோட்டத்திலிருந்து...

இவை தவிர்ந்த வேறுவகையாகவும் எவ்வித சிரமுமின்றி வாகனத்தைத் திருடவோ, கடத்தவோ சில குழுக்கள் திறமை பெற்றுள்ளன. வாகனத்தைக் கடத்திச்செல்ல துப்பாக்கியைக்காட்டி மிரட்டியோ, பலாத்காரமாகச் சாரதியை வெளியேற்றியோ இந்தத் திருடர் கும்பல் சிரமப்படுவதில்லை. பொலீஸ் அதிகாரிகள் போன்றோ அல்லது வாகனத்தை பறிமுதல் செய்யும் அதிகாரிகள்போன்றோ நடித்து எவ்விதத் தொல்லையுமின்றி வாகனத்தை அக்குழுவினர் அபகரித்துச் சென்றுவிடுகின்றனர்.

இன்று பெரும்பாலான வாகனக் கடத்தல்கள் இந்தவகையாகவே இடம்பெறுவதாக பொலீஸாரின் அறிக்கைகளில் இருந்து தெரியவருகிறது.

கடத்திச் செல்லும் வாகனங்களை என்ன செய்கிறார்கள் என்ற விவரங்கள் பலருக்குத் தெரியாத விடயமாக உள்ளது. கடத்தல் நடவடிக்கையில் ஈடுபடும் குழுக்கள் அவற்றை எவ்வாறு கடத்துகிறார்கள், அவற்றைப் பின்னர் என்ன செய்கிறார்கள் என்ற கேள்விகளுக்கு விரிவான பதிலும் இப்போது கிடைத்துள்ளது. வாகனத் திருட்டில் சம்பந்தப்படும் குழுவொன்றின் அங்கத்தினர் ஒருவரைச் சந்திக்க நேர்ந்த சமயம் அவரிடமிருந்து வாகனத் திருட்டுப் பற்றிய தகவல்களைத் தெரிந்துகொள்ளமுடிந்தது.

''தெருவில் நிறுத்தியிருக்கும் 'வான்' ஒன்றோ, ஓட்டோ ஒன்றோ அல்லது மோட்டார் சைக்கிளோ எமது இலக்காக இருக்கும். நாம் கடத்தவிருக்கும் வாகனத்தை நன்கு அவதானிப்போம். எவ்வளவு நேரமானாலும் சரி, நாம் அதனைப் பின்தொடர்வோம்.

"சாரதி, வாகனத்தை எங்காவது நிறுத்திவிட்டுச் செல்லும்போது நாம், எம்மிடமுள்ள கள்ளத் திறப்பைப் பயன்படுத்தி வாகனத்தை எடுத்துச் சென்றுவிடுவோம். அவ்வாகனத்தை சில மணித்தியாலங்களுக்குள் பிரித்துப் பாகங்களாக்கிவிடுவோம். அதன் பின்னர் எந்தக் கொம்பனாலும் அவ்வாகனத்தை மீட்கமுடியாது. ஒருவார காலத்துள் அப்பாகங்கள் யாவும் விற்கப்பட்டுவிடும்'' இப்படி அவர் கூறி முடித்தார். இவ்வாறு அவரது குழு திருடிய வாகனங்களின் எண்ணிக்கை அவர்களுக்கே நினைவில் இல்லையாம்.

களவாடப்பட்ட வாகனத்தை விலைகொடுத்து வாங்கவென்றே வியாபாரிகள் கூட்டமொன்று உள்ளது. இவர்களில் பொலீஸில் பணிபுரியும் உயரதிகாரிகள் முதல் வாகன விற்பனை முகவர்கள் வரை அடங்கியுள்ளனர் என்பது பல சந்தர்ப்பங்களில் பொலீஸாரின் விசாரணைகளின்போது தெரியவந்துள்ளது.

கடத்திச் செல்லப்படும் வாகனங்களின் இலக்கத்தகடுகள் அகற்றப்பட்டு, வேறு வர்ணம் பூசப்பட்டு, இன்னொரு நபருக்கு விற்கப்படுவதும் உண்டு. அவ்வாகனங்களை புதிதாகப் பதிவு செய்யவும், அனுமதிப் பத்திரம் வழங்கவும், மோட்டார் வாகனப் பதிவாளரின் காரியாலயத்தைச் சேர்ந்த, முறைகேடாக நடக்கும் ஒரு சில உத்தியோகத்தர்கள் உதவுவதாகத் தெரிகிறது.

## சமாதானச் சூழ்நிலையை அடுத்து கொள்ளையருக்குக் கொண்டாட்டம்

திருடப்பட்ட மோட்டார் வாகனம் அதனது பெறுமதியின் பாதித் தொகைக்கே விற்கப்படுவதுடன், அப்பணத்தை திருட்டுக் கோஷ்டியினர் தம்மிடையே பகிர்ந்துகொள்வதால் ஒரு சிறிய தொகைப் பணத்தையே ஒவ்வொருவரும் பெற்றுக்கொள்கின்றார்கள்.

அண்மையில் களனிப் பகுதிப் பொலீஸ் வாகனப் போக்குவரத்துப் பிரிவுப் பொறுப்பதிகாரி தனது பொலீஸ் அதிகாரத்தைப் பயன்படுத்தி ஒரு வாகனக் கொள்ளையில் ஈடுபட்டுள்ளார் என விசாரணைகளில் இருந்து தெரியவருகிறது. அந்தப் பொலீஸ் அதிகாரியின் தலைமையிலான குழுவினர் துப்பாக்கி முனையில் வாகனத்தைக் கடத்தியும், வாடகைக்கமர்த்துவதாக அழைத்துச் சென்று சாரதியைத் தாக்கிக் காயப்படுத்தி அல்லது மரத்தில் கட்டி வைத்தும் வாகனங்களைத் திருடியுள்ளனர். திருடிய வாகனங்களில் பெரும்பாலானவற்றைக் கழற்றி உதிரிப்பாகங்களாக்கி விற்றுள்ளனர். சிலவற்றை வர்ணம் மற்றும் இலக்கத்தை மாற்றி விற்பனை செய்துள்ளனர். திருடிய இருபது வாகனங்களில் ஐந்து வாகனங்களை பேலியகொட பொலீஸார் கைப்பற்றிய போதும், மற்றய வாகனங்கள் கழற்றி உதிரிப் பாகங்களாக்கப்பட்டு விற்கப்பட்டமையால் மேற்கொண்டு நடவடிக்கை எடுக்கமுடியவில்லை. மோட்டார் சைக்கிளொன்றைத் திருடிச் சென்ற நபரொருவர் சில தினங்களுக்கு முன் பொரளை காசல் மருத்துவமனை அருகில் பொரளைப் பொலீஸாரால் கைதுசெய்யப்பட்டார். அவரிடமிருந்து பெற்ற தகவல்களின்படி அந்த நபரால் 58 மோட்டார் சைக்கிள்கள் திருடப்பட்டதாக அறிய முடிந்தது. திருடிய மோட்டார் சைக்கிள்களை இலக்கம், நிறம் ஆகியவற்றை மாற்றி மோட்டார் வாகனப் பதிவாளர் காரியாலயத்தில் பதிவுசெய்து விற்றிருப்பது தெரியவந்தது. அதுதவிர அனைத்து மோட்டார் சைக்கிள்களுக்கும் பொருந்தக்கூடிய வாகனத் திறப்பொன்றும் அவரிடமிருந்து கைப்பற்றப்பட்டது.

பொலீஸ் அதிகாரிகள் போன்று நடித்து வாகனங்களைத் திருடும் ஒரு பெண் உட்பட கோஷ்டியொன்றினை அண்மையில் நாவலைப் பொலீஸார் கைது செய்தனர். அப்பெண்ணின் சாதுரியத்தினால் ஐம்பதுக்கும் மேற்பட்ட வாகனங்களை அக்கோஷ்டியினர் திருடியிருப்பதும், இராணுவத்திலிருந்து தப்பியோடிய பெண் சிப்பாயான அப்பெண்ணின் கணவரே இக்கோஷ்டியை வழி நடத்தியவர் என்பதும் தெரியவந்தது.

விடுதலைப் புலிகளுக்கும் அரசுக்குமிடையே ஏற்பட்ட புரிந்துணர்வு உடன்படிக்கையால் நிலவும் சுமுக நிலையால் வாகனத் திருடர்களே பெரும் நன்மை பெறுவதாகக் கூறப்படுகிறது.

வாகனங்களைக் கடத்துபவர்கள் கடத்திய உடனேயே அவற்றை விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டிலுள்ள வடக்கு - கிழக்குப் பகுதிகளுக்கு எடுத்துச்சென்று, அப்பகுதி வியாபாரிகளுக்கு குறைந்த விலைக்கு விற்று விடுகிறார்கள். இதனால் பாதுகாப்புப் பிரிவினருக்கு அவ்வகை வாகனங்களைக் கைப்பற்றுவது மிகவும் கடினமான காரியமாகவுள்ளது.

விடுவிக்கப்படாத பிரதேசங்களுக்கு களவாடப்பட்ட வாகனங்களை எடுத்துச்சென்று விற்பனை செய்வது தொடர்பான தகவல்கள் முதன் முதலில் நொச்சியாகம பொலீஸாருக்கே கிட்டியது.

இவ்வாண்டு முற்பகுதியில் கொழும்பு ரெலிகொம் நிறுவன கட்டடத்துக்கு முன்பாக நிறுத்தப்பட்டிருந்தவேளையில் திருடப்பட்ட வாகனம் ஒன்று நொச்சியாகம பொலீஸாரால் கைப்பற்றப்பட்டபோது, பிடிபட்டவர் அளித்த வாக்குமூலத்தில், அதனை விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டிலுள்ள பிரதேசத்துக்கு விற்பனைக்கு எடுத்துச் சென்றதை அறியமுடிந்தது. இவ்வாறு களவாடப்பட்டு விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசத்தில் விற்கப்பட்ட வாகனமொன்று முதன்முதலில் பேலியகொட பொலீஸாரினாலேயே கைப்பற்றப்பட்டது.

நிட்டம்புவ பிரதேசத்தில் சுங்கத் திணைக்கள உத்தியோகத்தரிடமிருந்து துப்பாக்கி முனையில் அபகரிக்கப்பட்ட வாகனத்தையும் அதனைத் திருடியவர்களையும் பொலீஸார் பிடித்து விசாரணை மேற்கொண்டபோது திருடப்படும் வாகனங்கள் வடபகுதியில் விற்பனைக்காக எடுத்துச் செல்லப்படுவதாகத் தெரியவந்துள்ளது.

வாகனங்கள் திருடப்பட்டு, அவை வடபகுதிக்கு எடுத்துச்செல்லப்பட்டு அங்கு விற்கப்படுவது தொடர்பான விவரங்களை மாளிகாவத்தை, குளியாபிட்டிய, வவுனியா பொலீஸாரால் காலத்திற்குக்காலம் வெளியிடப்பட்டுள்ளன. ஒரே சமயத்தில் பத்துப் பதினைந்து திருட்டு வாகனங்களையும் பொலீஸார் கண்டு பிடித்திருக்கிறார்கள்.

**தமிழில் : வியெஸ்ரி**

சமாதான முயற்சிகள் ஆரம்பிக்கப்பட்டு கடந்த மாத காலத்தினுள் மட்டும் சுமார் 100 வாகனங்கள் திருடப்பட்டு வடபகுதிக்கு எடுத்துச்செல்லப்பட்டதாகப் பொலீஸார் சந்தேகிக்கின்றனர்.

புலிகளுடன் தொடர்புகொண்டு அப்படியான வாகனங்களைப் பெற்றுக் கொள்வதற்கு பொலீஸ் உயரதிகாரிகள் தற்போது முயற்சிகள் மேற்கொள்கின்றனர்.

பொலீஸாரின் தகவல்களின் படி இதுவரை நாட்டில் வாகனத் திருட்டில் சம்பந்தப்பட்டிருப்பதாகச் சந்தேகத்தின் பேரில் நூற்றுக்கணக்கானோர் கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டிருக்கிறார்கள்.

அவர்களின் தராதர அடிப்படையில் நோக்கும்போது, அவர்களிடையே அரசியல்வாதிகளின் உறவினர்கள் பிரபல கலைஞர்கள், பொலீஸ் உயரதிகாரிகள் போன்ற சமூகத்தில் உயர் மட்டத்தில் கணிக்கப்படுவோர் ஆகியோரின் பிள்ளைகளும் சம்பந்தப்பட்டிருப்பதாகத் தெரியவந்துள்ளது.

அவர்கள் நீதி விசாரணைகளிலிருந்து தப்பிவிடுவதுடன் வாகனத் திருட்டில் ஈடுபடுவதற்காக உறவினர்களின் ஒத்துழைப்பையும் பெறுவதாகத் தெரிவிக்கப்படுகிறது. சில கொள்ளையர்கள் தங்கள் நோக்கத்தை நிறைவேற்றுவதற்காக சாரதியைக் கொலை செய்தாவது வாகனத்தைக் கடத்திச்செல்லத் தயாராயுள்ளனர். கடந்த பத்து ஆண்டுகளில் மட்டும் நூறு வாகனச் சாரதிகள் இவ்வாறான நடவடிக்கைகளின்போது கொல்லப்பட்டிருக்கிறார்கள். வாகனங்களை கொள்ளையிடுதல், கடத்துதல், திரு

(09ஆம் பக்கம் பார்க்க)

# கல்விச்சாலைக் காட்சிகள்



**கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரியின் 150ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு கல்லூரியின் இன்ரறக்ட் கழகத்தினர் இரத்ததானம் வழங்கும் நிகழ்வு ஒன்றை அண்மையில் ஏற்பாடு செய்திருந்தனர். அப்போது எடுக்கப்பட்ட படம் இது. (எ)**



**ஹற்றன் நஷனல் வங்கியினால் யாழ்.திருக்குடும்ப கன்னியர் மடம் பாடசாலையில் மாணவர் சேமிப்புப் பிரிவு ஒன்று அண்மையில் திறந்து வைக்கப்பட்டது.**

**இது தொடர்பாக இடம்பெற்ற நிகழ்வில் கல்லூரி அதிபர் அருட் சகோதரி யோலன்ட் உரையாற்றுவதை படத்தில் காணலாம். அருகில் வங்கியின் பிரதேச முகாமையாளர் சு.சோதிலிங்கம், யாழ். கிளை முகாமையாளர் தி.ஜெயராஜசிங்கம், வங்கிப் பிரமுகர் பி.சஞ்சீவ் மற்றும் மாணவிகள் ஆகியோர் காணப்படுகின்றனர். (எ)**



**மானிப்பாய் சோதி வேம்படி வித்தியாசாலையின் வருடாந்த பரிசளிப்பு விழா அண்மையில் நடைபெற்றது.**

**இந்த விழாவில் பிரதம அதிதியாகக் கலந்துகொண்ட வலிகாமம் கல்வி வலயப் பிரதிக் கல்விப் பணிப்பாளர் திருமதி றெஜினா இருதயநாதன் மாணவர் ஒருவருக்கு பரிசில் வழங்குவதைப் படத்தில் காணலாம். (எ-135)**



**நர்வேலி அத்தியார் இந்துக் கல்லூரியில் புதிதாக அமைக்கப்பட்ட கணனி அறை அண்மையில் திறந்துவைக்கப்பட்டது. பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட எஸ்.தர்மலிங்கம் நாடாவை வெட்டிக் கட்டடத்தை திறந்துவைப்பதைப் படத்தில் காணலாம்.**

**அருகில் பாடசாலை அதிபர் இ.குணநாதன், உதவிக் கல்விப் பணிப்பாளர் இ.சிவஞானசுந்தரம் ஆகியோரும் காணப்படுகின்றனர். (எ-133)**

# பண்டா - செல்வா, டட்லி - செல்வா ஒப்பந்தங்களுக்கு அன்று நேர்ந்த கதி

## 1949முதல் 1976வரையான காலகட்டம் முக்கியமானது

தமிழ்க் காங்கிரஸ் கட்சியை விட்டு வெளியேறிய குழுவினர் 1948 டிசெம்பர் 18ஆம் திகதி அகில இலங்கைத் தமிழரசுக் கட்சியை உருவாக்கினர்.

அதுவரை கோரிக்கையாக முன்வைத்த சமத்துவக் கோரிக்கையை கைவிட்டு, சமஷ்டிக் கோரிக்கையை முன்னெடுத்தனர். இதன்படி வடக்கு - கிழக்கு மாகாணங்களில் வாழ்கின்ற தமிழ்பேசும் மக்களின் தயாகத்தில் ஒரு சுயாட்சித் தமிழரசு ஒன்றை நிறுவ வேண்டும் எனக்கோரினர்.

தமிழரசுக் கட்சியின் தோற்றத்துடன் தமிழர் அரசியலில் மூன்று முக்கிய மாற்றங்கள் ஏற்பட்டன.

1. அதுவரைகால 50:50 கோரிக்கை கைவிடப்பட்டு சமஷ்டிக் கோரிக்கை முன்னெடுக்கப்பட்டது.

2. அதுவரை காலமும் யாழ்ப்பாணத்துடனும் கொழும்புடனும் வரையறுக்கப்பட்டிருந்த தமிழ் தேசிய அரசியல் வடக்கு - கிழக்கு மாகாணமெங்கும் பரவத் தொடங்கியது.

3. அதுவரை காலமும் மனுக்கள், கோரிக்கைகள் என்பனவற்றை முன்வைத்தல் என்கின்ற போராட்ட வடிவத்துக்குப் பதிலாக மக்களை இணைத்து போராட்டங்களை நடத்துதல் என்ற வடிவம் வளரத்தொடங்கியது.

போராட்டம் என்ற வகையில் தமிழரசுக் கட்சியினர் 1950இல் சோல்பரியின் யாழ்ப்பாண வருகையை பகிஷ்கரித்தல், யாழ்ப்பாணம் வருகை தந்த பிரதமர் சேர் ஜோண் கொத்தலாவலக்கு கறுப்புக்கொடி காட்டுதல், 1956 காலிமுகத்திடல் சத்தியாக்கிரகம், இதே ஆண்டு திருகோணமலை பாதயாத்திரை, 1961ஆம் ஆண்டு சத்தியாக்கிரகப் போராட்டம் என்பவற்றை நடத்தினார்கள்.

1956ஆம் ஆண்டு நடைபெற்ற பொதுத் தேர்தலில் தமிழரசுக் கட்சி வடக்கு - கிழக்கு மாகாணங்களில் மொத்தம் 16இல் 10 ஆசனங்களைப் பெற்று தமிழர்கள் மத்தியில் தனிப் பெரும் கட்சியான வளர்ந்தது.

இதே ஆண்டு பதவிக்கு வந்த எஸ்.டபிள்யூ.ஆர்.டி.பண்டாரநாயக்க தலைமையிலான மக்கள் ஐக்கிய முன்னணி அரசு 1956 ஜூன் 5இல் தனிச் சிங்களச் சட்டத்தைக் கொண்டு வந்தது.

இதனை எதிர்த்து தமிழரசுக் கட்சி கொழும்பு காலிமுகத்திடலில் சத்தியாக்கிரகப் போராட்டம் ஒன்றை நடத்தியது. அப்போராட்டம் அரசசார்பாளர்களினால் தாக்கப்பட்டதால் தமிழரசுக் கட்சியின் தலைவர்கள் உட்படப் பலர் காயமடைந்தனர். இந்த நிலைமை இனரீதியான பிரச்சினையை மேலும் சிக்கலாக்கியது.

### பண்டா - செல்வா ஒப்பந்தம்

1957ஆம் ஆண்டு ஜூலை மாதம் 26ஆம் திகதி இலங்கைப் பிரதமரான எஸ்.டபிள்யூ.ஆர்.டி.பண்டாரநாயக்காவுக்கும் அகில இலங்கைத் தமிழரசுக் கட்சித் தலைவரான எஸ்.ஜே.வி. செல்வநாயகத்துக்கும் இடையில் இனப்பிரச்சினைக்குத் தீர்வாக ஒப்பந்தம் ஒன்று கைச்சாத்திடப்பட்டது. 'பண்டா - செல்வா ஒப்பந்தம்' என இது அழைக்கப்பட்டது.

இந்த ஒப்பந்தத்தின் மூலம் அதிகாரங்களைப் பரவலாக்கும் வகையில் பிராந்திய சபைகள் அமைக்கப்படும் எனக் கூறப்பட்டது. இவ்வாறு அமைக்கும்போது வடமாகாணம் ஒரு பிராந்தியமாக இருக்கும் எனவும் கிழக்கு மாகாணம் இரண்டு அல்லது மூன்று பிராந்தியங்களாக உருவாக்கப்படும் எனவும் கூறப்பட்டது.

இரண்டு அல்லது இரண்டுக்கு மேற்பட்ட பிராந்தியங்கள் விரும்பினால் இணைந்துகொள்வதற்கும் வழி வகுக்கப்படும் எனவும் கூறப்பட்டது.

பிராந்திய சபைகளின் அதிகாரங்களாக விவசாயம், கூட்டுறவு, காணி, காணி அபிவிருத்தி, குடியேற்றம், கல்வி, சுகாதாரம், கைத்தொழில், மீன்பிடி, வீடமைப்பும் சமூக சேவைகளும், மின்சாரம், நீர்விநியோகத் திட்டம், நெடுஞ்சாலைகள் போன்றன வழங்கப்படும் எனவும் கூறப்பட்டது.

மொழியைப் பொறுத்தவரை ஒரு தேசிய சிறுபான்மை மொழியாக தமிழ் மொழி அங்கீகரிக்கப்படும் என்றும் வடக்கு - கிழக்கு மாகாணங்களின் நிர்வாக அலுவல்கள் தமிழ் மொழியில் நடைபெறும் எனவும் கூறப்பட்டது.

குடியேற்றங்களைப் பொறுத்தவரை தமது அதிகார எல்லைக்குட்பட்ட காணிகள் வழங்கப்படவேண்டிய குடியேற்றவாசிகளைத் தெரிவுசெய்வதும், அத்திட்டங்களில் வேலைக்கமர்த்தப்படும் ஆள்களைத் தெரிவு செய்வதும் பிரதேச சபையின் அதிகாரத்துக்குட்பட்டதாக இருக்கும் என்பது ஏற்றுக்கொள்ளப்பட்டது.

அப்போது செயற்பட்டுக்கொண்டிருந்த கல்லோயா அபிவிருத்திச் சபையினால் நிர்வகிக்கப்படும் பிரதேசத்தின் நிலை ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்படும் எனவும் கூறப்பட்டது.

மேலும் பிரதேச சபைகளுக்கு மத்திய அரசு மொத்தமாக நிதியினை வழங்கும் எனவும் தொகையின் அளவு, அது தொடர்பான கொள்கை என்பன பற்றி ஆராயப்படும் எனவும் பிரதேச சபைகளுக்கு வரி விதிக்கவும் கடன் வழங்கவும் அதிகாரம் இருக்கும் எனவும் கூறப்பட்டது.

### கண்டி யாத்திரை

இந்த ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்ட சிறிது நாள்களிலேயே ஐக்கிய தேசியக் கட்சி இதனைக் காரசாரமாக எதிர்த்தது. ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவராக இருந்த ஜே.ஆர். ஜெயவர்த்தனா 1957ஆம் ஆண்டு ஒக்ரோபர் 4ஆம் திகதி இந்த ஒப்பந்தத்தை எதிர்த்து கடவுளின் ஆசீர்வாதம் வேண்டி கண்டி யாத்திரையை மேற்கொண்டார்.

இதைவிட பௌத்த குருமார்கள் பண்டாரநாயக்காவின் இல்லத்தின் முன்னால் 1958 ஏப்ரல் 8 தொடக்கம் சத்தியாக்கிரகம் இருந்தனர். பண்டாரநாயக்காவின் மந்திரி சபையின் அங்கத்தவர்கள் சிலரும் இதற்கு ஆதரவு கொடுத்தனர். குறிப்பாக சுகாதார அமைச்சராக இருந்த விமலா விஜயவர்த்தனா நேரடி ஆதரவினை வழங்கினார்.

போராட்டம் தொடர்ச்சியாக வளரும் சூழ்நிலையை அவதானித்த பிறகு அவர்களின் முன்னாலேயே பண்டாரநாயக்கா ஒப்பந்தத்தைக் கிழித்து எறிந்தார். இதனால், இனப்பிரச்சினையைத் தீர்ப்பதற்காக எடுக்கப்பட்ட முதல் ஒப்பந்த முயற்சி செயலற்றுப்போனது.

1958ஆம் ஆண்டு மிகப்பெரிய இனக்கலவரம் ஒன்று நடைபெற்றது. வடக்கு-கிழக்குக்கு வெளியே வாழ்ந்த தமிழ் மக்கள் மிகமோசமாகப் பாதிக்கப்பட்டனர்.

1959ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் 25ஆம் திகதி பிரதமாக இருந்த பண்டாரநாயக்கா சுடப்பட்டு 26ஆம் திகதி மரணமானார். அவரைத் தொடர்ந்து டபிள்யூ.தஹநாயக்கா பிரதாமாராகப் பதவியேற்றார். 1960 நாடாளுமன்றத்தில் அரசுக்குப் போதிய பெரும்பான்மை கிடைக்காது என அவர் கருதியமையினால் நாடாளுமன்றத்தைக் கலைக்குமாறு சிபார்சு செய்தார்.

### 1960 மார்ச் தேர்தல்

1960மார்ச்சில் நடைபெற்ற தேர்தலில் எந்தக் கட்சியுமே பெரும்பான்மைப் பலத்தினைப் பெற்றுக்கொள்ளவில்லை. எனினும் எல்லாக்கட்சிகளிலும் அதிகூடிய ஆசனங்களைப் பெற்றுக் கொண்ட கட்சி என்ற வகையில் ஐக்கிய தேசியக் கட்சி அரசை அமைக்க முயன்றது. இத்தேர்தலில் தமிழரசுக் கட்சிக்கு 15ஆசனங்கள் கிடைத்தன.

தமிழரசுக்கட்சி, அரசுக்குத் தங்களது ஆதரவு வேண்டுமாயின் தமிழ் மக்களின் அபிலாஷைகளைப் பிரதிபலிக்கும் கோரிக்கைகளை ஏற்றுக்கொள்ளுதல் வேண்டும் என நான்கு அம்சக் கோரிக்கையை முன்வைத்தது. அவற்றுள் பின்வருவன அமைந்திருந்தன.

1. பண்டா - செல்வா உடன்படிக்கையில் கூறப்பட்டதன் பிரகாரம் பிரதேச சபைகள் நிறுவப் படவேண்டும். அதற்கிடையே தமிழ்ப் பிரதேசத்தில் குடியேற்றங்கள் நிறுத்தப்படல் வேண்டும்.

2. பண்டா - செல்வா ஒப்பந்தத்தில் ஏற்றுக்கொள்ளப்பட்ட உரிமைகள் யாவும் தமிழ் மொழிக்கு சட்டபூர்வமாக வழங்கப்படல் வேண்டும்.

3. இலங்கைப் பிரஜாவுரிமைச் சட்டத்தில் குறிப்பிட்ட திகதி என்பது நீக்கப்பட்டு இரண்டு தலைமுறைகளுக்கு இந்நாட்டில் பிறந்தோர் அனைவருக்கும் குடியுரிமை வழங்குவதன் மூலம் நாடற்ற தமிழர் என்ற நிலை நாளடைவில் மாறவேண்டும்.

4. குடியுரிமைப் பிரச்சினை தீருமவரை ஆறு நியமனப் பிரதிநிதிகளில் நான்கு பேர் மலைநாட்டுத் தமிழ் மக்களின் பிரதிநிதித்துவம் வாய்ந்த ஸ்தாபனமான இலங்கை ஜனநாயகக் காங்கிரஸினால் நியமிக்கப்பட்டவர்களாக இருந்தல் வேண்டும்.

இதையொட்டிய விவரங்கள் ஆளும் கட்சிக்கும் தமிழரசுக் கட்சிக்கும் இடையில் பேச்சு மூலம் தீர்க்கப்படல் வேண்டும். அத்துடன் ஏற்றுக்கொண்ட விடயங்கள் சிம்மாசனப் பிரசங்கத்தில் இடம்பெறவேண்டும்.

இக்கோரிக்கைகளை எழுத்தில் பெற்றுக்கொண்ட ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவரான டட்லி சேனநாயக்கா பின்னர் அவற்றை நிராகரித்தார்.

ஆனால், ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் சார்பில் பேச்சுக்களில் கலந்துகொண்ட சி.பி.டி.சில்வா, ஏ.பி.ஜயசூரிய, மைத்திரிபால சேனநாயக்கா, பீலிக்ஸ் டயஸ் பண்டாரநாயக்கா ஆகியோர் இக்கோரிக்கைகள், பண்டாரநாயக்காவின் கொள்கைகளுக்கு ஏற்றதாக இருப்பதால் அவற்றைத் தாம் பூரணமாக ஏற்றுக்கொள்வதாக குறிப்பிட்டனர்.

இதுவிடயமாக ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியுடன் எடுத்துக்கொண்ட உடன்பாட்டின்படி சிம்மாசனப் பிரசங்க வாக்கெடுப்பில் தமிழரசுக் கட்சி எதிர்த்து வாக்களித்தது.

### பொதுத்தேர்தல்

அரசு கவிழ்ந்ததைத் தொடர்ந்து எதிர்க்கட்சியை அரசமைக்கும்படி கேட்பதே மரபாக இருந்தபோதும் அப்போது மகாதேசாதிபதியாக இருந்த சேர் ஒலிவர் குணதிலக்க, எதிர்க்கட்சியை அரசு அமைக்கும்படி கேட்காமல் பொதுத்தேர்தலுக்கு உத்தரவிட்டார்.

இதன்படி 1960 ஜூலையில் அடுத்த தேர்தல் நடைபெற்றது.

இத்தேர்தலில் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி 75 ஆசனங்களைப் பெற்றுத் தனியாக ஆட்சியமைக்கக்கூடிய நிலைக்கு வந்தது. ஐக்கிய தேசியக்கட்சிக்கு 30 ஆசனங்கள் மட்டுமே கிடைத்தன. அகில இலங்கை தமிழரசுக் கட்சிக்கு 16 ஆசனங்கள் கிடைத்தன.

தமிழ்மொழி விசேட உபயோகச் சட்டம் 1966 ஜனவரி 8 ஆம் திகதி நாடாளுமன்றத்தில் அறிமுகப்படுத்தப்பட்டது. எதிர்ப்புக்களுக்கு மத்தியிலும் சட்டம் நிறைவேற்றப்பட்டது.

ஆனால், நடைமுறையில் செயற்படுத்துவதற்கான நடவடிக்கைகள் பெரிதாக மேற்கொள்ளப்படவில்லை.

ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி தனித்து அரசு அமைக்கக்கூடிய நிலை இருந்ததனால் ஏற்கனவே இனப்பிரச்சினைக்குத் தீர்வாக தமிழரசுக் கட்சியுடன செய்துகொண்ட உடன்பாட்டினையும நிராகரிக்கமுடிந்தது. அக்கட்சியுடன் செய்துகொண்ட உடன்பாட்டுக்கு புறம்பாக நாடு முழுவதிலும் சிங்கள மொழியை நீதிமன்ற மொழியாக்கும் மசோதாவினை நாடாளுமன்றத்தில் சமர்ப்பித்தது.

தமிழரசுக் கட்சி இதற்குப் பலமான எதிர்ப்பினைத் தெரிவித்தபோதும் மசோதா நிறைவேற்றப்பட்டது. இச்செயற்பாட்டுடன் இனப்பிரச்சினைக்கான தீர்வு முயற்சிகளும் சீர்குலைந்தன.

1961ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 20 ஆம் திகதி தமிழரசுக் கட்சியின் தலைவரான எஸ்.ஜே.வி. செல்வநாயகம் தலைமையில் தமிழ்ப் பிரதேசங்களில சிங்கள மொழியை அமுல்படுத்துவதற்கு எதிராக வடக்கு - கிழக்கு எங்கும் சத்தியாக்கிரகப் போராட்டம் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

சுமார் ஒரு மாத காலமாகத் தொடர்ந்த சத்தியாக்கிரகப் போராட்டம் 1961 ஏப்ரல் 17ஆம் திகதி இராணுவத்தினரால் தாக்கப்பட்டுக் கலைக்கப்பட்டது. தமிழரசுக் கட்சியின் தலைவர்கள் கைதுசெய்யப்பட்டு தடுப்புக் காவலில் வைக்கப்பட்டனர். அவர்களின கட்சிப் பத்திரிகையான 'சுதந்திரன்' தடைசெய்யப்பட்டது.

1965ஆம் ஆண்டும் தேர்தல் நடைபெற்றபோது, அத்தேர்தலில் எக்கட்சியும் அறுதிப் பெரும்பான்மையைப் பெற்றுக்கொள்ளவில்லை. ஐக்கிய தேசியக் கட்சி 66 ஆசனங்களையும் ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி 41 ஆசனங்களையும் தமிழரசுக்கட்சி 14 ஆசனங்களையும் பெற்றன.

ஐக்கிய தேசியக் கட்சி அரசை அமைக்க முற்பட்டபோது இந்தத் தடவை தமிரசுக்கட்சி சில கோரிக்கைகளின் அடிப்படையில் ஐக்கிய தேசியக் கட்சியை ஆதரிக்க முன்வந்தது.

### டட்லி - செல்வா ஒப்பந்தம்

இதனடிப்படையில் 1965ஆம் ஆண்டு மார்ச் 24ஆம் திகதி பிரதமர் டட்லி சேனநாயக்கவுக்கும் தமிழரசுக்கட்சியின் தலைவர் எஸ்.ஜே.வி. செல்வநாயகத்துக்கும் இடையே ஒப்பந்தம் ஒன்று கைச்சாத்திடப்பட்டது. 'டட்லி - செல்வா ஒப்பந்தம்' என இது அழைக்கப்பட்டது.

இந்த ஒப்பந்தத்தில் தமிழ்மொழிக்கான அந்தஸ்து, அதிகாரப் பரவலாக்கல், வடக்கு - கிழக்கு குடியேற்றம் எனும் மூன்று முக்கிய விடயங்கள் என்பன அடங்கியிருந்தன.

மொழி தொடர்பாக பின்வரும் மூன்று விடயங்கள் இவ்வுடன்படிக்கையில் தெரிவிக்கப்பட்டன.

1. வடக்கு - கிழக்கு மாகாணங்களில் நிர்வாக மொழியாகத் தமிழ் மொழியே பயன்படுத்துவதற்கான நடவடிக்கைகள் தமிழ்மொழி விசேட சட்டத்தின்கீழ் மேற்கொள்ளப்படும்.

2. தமிழ்மொழியைப் பேசும் எவரும் தமது நடவடிக்கைகளை நாட்டின் எப்பகுதியிலும் தமிழில் மேற்கொள்ள முடியும்.

3. வடக்கு - கிழக்கு மாகாணங்களில் சட்டநடவடிக்கைகள் அனைத்தும் தமிழில் மேற்கொள்ளப்பட்டு பதிவுசெய்துகொள்வதற்கு ஏற்றதாக நீதிமன்றத்தின்மொழி மாற்றியமைக்கப்படும்.

மேலும், இவ்வுடன்படிக்கையில் அதிகாரப்பரவலாக்கல் தொடர்பாக இரண்டு விடயங்கள் தெரிவிக்கப்பட்டன.

1. இரு தலைவர்களுக்கும் இடையே இணக்கம் காணப்பட்ட விடயங்களில் அதிகாரங்களைக் கொண்டுள்ள மாவட்டசபைகள் அமைக்கப்படும்.

2. தேசிய அக்கறையுள்ள விடயங்களில் மாவட்ட சபைகளைக் கட்டுப்படுத்தக்கூடிய வகையில் சட்டத்தின் கீழான அதிகாரங்களை அரசாங்கம் கொண்டிருக்கவேண்டும்.

குடியேற்றம் தொடர்பாக உடன்படிக்கையில் பின்வரும் இரண்டு விடயங்கள் தெரிவிக்கப்பட்டிருந்தன.

1. இலங்கைப் பிரஜைகள் காணி ஒதுக்கீட்டைப் பெறக்கூடிய விதமாக காணி அபிவிருத்திச் சட்டமூலம் திருத்தியமைக்கப்படும்.

2. வடக்கு - கிழக்கு மாகாணங்களில் குடியேற்றத்திட்டங்களின் கீழ் காணி ஒதுக்கீட்டை மேற்கொள்ளும் போது பின்வரும் முறைகள் பின்பற்றப்படும்.

அ) குடியேற்றம் நடைபெறும் மாவட்டத்திலுள்ள காணியற்றோருக்கு முதலிடம் கொடுக்கப்படும்.

ஆ) இரண்டாவது இடம் வடக்கு - கிழக்கு மாகாணங்களில் வசிக்கும் தமிழ்பேசும் மக்களுக்கு வழங்கப்படும்.

இ) மூன்றாவது இடம் ஏனையோருக்கு வழங்கப்படும். இதில் நாட்டின் பகுதிகளில் உள்ள தமிழ் பேசும் மக்களுக்கு முன்னுரிமை கொடுக்கப்படும்.

### மந்திரிசபை

இந்த ஒப்பந்தத்தின்படி தமிழரசுக்கட்சி, ஐக்கிய தேசியக் கட்சி அரசாங்கத்துக்கு ஆதரவு கொடுத்ததோடு அல்லாமல் மத்திரிசபையிலும் இணைந்துகொண்டது. தமிழரசுக் கட்சியின் முக்கியஸ்தர்களில் ஒருவரான மு.திருச்செல்வம் உள்ளூராட்சி அமைச்சராகவும் பொறுப்பேற்றார்.

உடன்படிக்கையில் தெரிவிக்கப்

(10ஆம் பக்கம் பார்க்க)

யாழ்/இளங்கலைஞர் மன்றம்
நல்லூர் முருகன் உற்சவ காலத்தை ஒட்டி
நல்லூர் துர்க்காதேவி மண்டபத்தில் வழங்கும்

தெய்வீக இசையரங்கு

இன்று (19.08.2002) திங்கட்கிழமை மாலை 6.00 மணிக்கு
இன்னிசை வழங்குபவர்
திரு.திருமதி நவேந்திரன் - கலைச்செல்வி
தம்பதியினரின் சிரேஷ்ட புத்திரியும்
லண்டன் மேற்கு தமிழ் பாடசாலை மாணவியுமாகிய

செல்வி தர்ஷனா நவேந்திரன்
அவர்கள்

அணிசெய் கலைஞர்கள்

வயலின் : திரு. V.R.இராதாகிருஷ்ணன்
மிருதங்கம் : திரு. S.துரைராஜா
கடம் : திரு. S. வேல்மாறன்
மோர்சிங் : திரு. S.இராஜு
கெஞ்சிரா : திரு. K.அனந்தகோபன்

இசை ஆராதனை சிறப்பாக நடைபெற
கந்தன் அருளை நாடுகிறோம்.
இசை ஆர்வலர்களை அன்புடன் அழைக்கின்றோம்.



- அரங்கிசை
ஏற்பாட்டாளர்கள்.

(7226)

## ஓட்டுசுட்டானில் மூடப்பட்டுள்ள

# ஓட்டுத் தொழிற்சாலை ஊழியருக்கு கொடுப்பனவுகளை வழங்குங்கள்!

## மாவை சேனாதிராஜா எம்.பி. வேண்டுகோள்

யாழ்ப்பாணம்,ஓக.19

ஒட்டுசுட்டான் ஓட்டுத் தொழிற்சாலையை மீண்டும் இயக்குவதற்கு நடவடிக்கை எடுப்பதுடன், அத்தொழிற்சாலையின் ஊழியர்களுக்கு உரிய கொடுப்பனவுகளையும் வழங்குமாறு யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராஜா, கைத்தொழில் அமைச்சர் றோகித போகொல்லாகமவுக்கு கடிதம் ஒன்றை அனுப்பி வைத்துள்ளார்.

அந்தக் கடிதத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

இலங்கை மட்பாண்டக் கூட்டுத்தாபனத்தின் கண்காணிப்பின்கீழ் இயங்கிய ஒட்டுசுட்டான் ஓட்டுத் தொழிற்சாலையில் சுமார் 160 ஊழியர்கள் தொடர்ச்சியாக 20 வருடகாலத்திற்கும் மேலாக கடமையாற்றியுள்ளனர். இந்தத் தொழிற்சாலை அப்போது வெற்றிகரமாகவும், இலாபகரமாகவும் இயங்கியது. அதனால், அங்கு உற்பத்தியான தட்டை ஓடு, பீலி ஓடு, செங்கற்கள், மண்கிறில் போன்ற கட்டடப் பொருள்கள் வடக்கில் பாரியளவில் விநியோகம் செய்யப்பட்டன.

1991ஆம் ஆண்டு இத்தொழிற்சாலை மூடப்படும்வரை ஊழியர்கள் கூடிய சம்பளம், வருடாந்த சம்பள உயர்வுகள், மேலதிக வேலைகளுக்கான கொடுப்பனவுகள், விடுமுறைச் சம்பளம், வதிவிடம் ஆகிய பல வசதிகளை அனுபவித்துவந்தனர்.

இந்நிலையில், 1991இல் இப்பகுதியில் ஏற்பட்ட இனக் கலவரத்தினால் இத்தொழிற்சாலை இயங்காமற்போனதாலும், யுத்தசூழ்நிலை காரணமாகவும் ஊழியர்கள் இடம்பெயர்ந்து அல்லற்பட்டார்கள்.

அந்தச் சமயத்தில் சிமெந்துக் கூட்டுத்தாபனம், உப்புக் கூட்டுத்தாபனம், இலங்கை இரசாயனக் கூட்டுத்தாபனம் போன்ற மற்றைய அரச கூட்டுத்தாபனங்களின் ஊழியர்களுக்கும் இனக்கலவரம் காரணமாக இதே கதி நேர்ந்திருந்தது. ஆயினும், அந்தக் கூட்டுத்தாபனங்கள் தத்தமது ஊழியர்களுக்கு வேதனங்கள் வழங்கி அவர்களைப் பாதுகாத்து வந்துள்ளன. அப்படியிருக்க, இந்தத் தொழிற்சாலை மட்டும் தனது ஊழியர்களுக்கு அவர்களின் துன்பத்தைப்போக்க ஊதியமாக வேதனம் எதுவும் வழங்காமல், அவர்களை நிர்க்கதியாக விட்டமை ஒரு துரதிர்ஷ்டமானதாகும்.

இனக்கலவரம் காரணமாக இத்தொழிற்சாலை ஊழியர்கள் தமதும், தமது குடும்பத்தினரதும் உயிர்களைப் பாதுகாப்பதற்காகப் புகலிடம் தேடி ஓடிய அந்த இக்கட்டான நேரத்தில், தொழிற்சாலைச் சட்டதிட்டங்களை அவர்களால் அனுசரிக்க இயலவில்லை. அதனை வைத்து அவர்கள் கடமைக்கு சமுகம் அளிக்கவில்லை என்ற போர்வையில் அவர்கள் தாமாகவே சேவையிலிருந்து நீங்கியுள்ளார்கள் என்று கருதப்பட்டுள்ளார்கள்.

எனவே, மனிதாபிமானமற்ற முறையில் அவர்களின் ஊதியத்தை வழங்காதது அநியாயமான செயலாகும்.

அந்த ஊழியர்களுக்கான சேமலாபநிதி, ஊழியர் நம்பிக்கை நிதி, பணிக்கொடை போன்ற கொடுப்பனவுகள் எதுவும் மட்பாண்டக் கூட்டுத்தாபனத்தால் இன்னும் வழங்கப்படாமல் உள்ளன. அந்த ஊழியர்கள் அனைவரும் சட்டதிட்டங்களை - கையாளாமல் கடமைக்குச் சமுகமளிக்காமல் - தாமாகவே சேவையிலிருந்து நீங்கி விட்டார்கள் எனக் கூட்டுத்தாபனத்தால் கருதப்பட்டாலும்கூட அவர்களுக்கு வழங்கப்படவேண்டிய கொடுப்பனவுகளை வழங்குவதற்கு இதுவரை எவ்வித நடவடிக்கையும் கூட்டுத்தாபனத்தால் எடுக்கப்படவில்லை.

நாட்டுச் சூழ்நிலை தற்போது சாதகமாக மாறியுள்ளதால், இத்தொழிற்சாலை மீண்டும் இயங்கத் தொடங்கி வடபகுதியின் கட்டடப் பொருள் தேவைகளை நிறைவு செய்யலாம்.

ஆகவே, தொழிற்சாலையை மீள இயக்குதல், ஊழியர்களை மீளச் சேவையில் சேர்த்துக்கொள்ளல், ஓய்வு பெறும் வயதடைந்தவர்களது கொடுப்பனவுகளை வழங்குதல் மற்றும் இறந்த ஊழியர்களது குடும்பத்தவர்க்கு சேமலாபநிதி, நம்பிக்கை நிதி, பணிக் கொடை போன்ற கொடுப்பனவுகளை வழங்குதல் ஆகிய நடவடிக்கைகளை கூட்டுத்தாபனம் மேற்கொள்ளவேண்டும் என்று கேட்டுக் கொள்கின்றேன்.

ஊழியர்களின் நன்மை கருதி மட்டுமன்றி, வடக்கில் சேதமடைந்த பல கட்டடங்களை மீளக் கட்டியெழுப்ப மேற்படி கூட்டுத்தாபன உற்பத்திப் பொருள்கள் தேவைப்படுகின்றன. தற்போது அப்பொருள்கள் கொழும்பு போன்ற தூர இடங்களிலிருந்து தருவிக்கப்படுகின்றன. எனவே, இச்சந்தர்ப்பத்தில் இத்தொழிற்சாலை மீள இயங்குமானால் நல்ல வருமானத்தை பெறும்.

எனவே, மேற்படி விடயங்கள் தங்களது கவனத்தில் எடுக்கப்படும் என்று நம்புகின்றேன் - என்றுள்ளது.(ஒ-4)



திருகோணமலையில் 'யுகதர்ம' கண்காட்சியின் இரண்டாம் நாள் நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட ஐ.தே.கவின் பிரதித் தலைவரும், எரிபொருள் மின்சக்தி அமைச்சருமான கரு ஜெயசூரியா அன்றைய தின நிகழ்வை ஆரம்பித்து வைத்தபோது எடுத்த படம். மேற்குப் பிராந்திய அபிவிருத்தி அமைச்சர் முஹமட், கல்வி மனிதவள அபிவிருத்தி அமைச்சர் கருணாசேன கொடித்துவக்கு, கைத்தொழில் அமைச்சர் றோகித போகொல்லாகம ஆகியோரும் படத்தில் உள்ளனர். (ஒ-290)

# கொடிகாமம் பஸ் நிலையத்தில் மினிவான்கள் ஆக்கிரமிப்பாம்!

தென்மராட்சி,ஓக.19

வடபிராந்திய போக்குவரத்துச் சபை பஸ்களுக்கென பிரத்தியேகமாக அமைக்கப்பட்ட கொடிகாமம் பஸ் நிலையம் தற்போது தனியார் மினிபஸ்களால் ஆக்கிரமிக்கப்பட்டிருப்பதாகக் கூறப்படுகிறது.

இதனால் போக்குவரத்துச் சபையின் பஸ்களை நிலையத்தில் நிறுத்த முடியாதுள்ளதாகவும் -

அந்த பஸ்களில் பயணிக்கும் பயணிகள் பஸ் நிலையத்திலிருந்து அதிக தூரத்தில் இறக்கிவிடப்படுவதாகவும் -

பொதுமக்கள் குறைகூறியுள்ளனர்.

பஸ் நிலையத்திலும் கொடிகாமம் புகையிரத நிலையத்திலிருந்து அதிக தூரத்துக்கு வீதியோரங்களிலும் தனியார் வாகனங்கள் தரித்து நிற்பதால் போக்குவரத்துச்சபை பஸ்களில் ஏறும் கொடிகாமம் பயணிகள் பஸ் நிலையத்திற்கு அப்பால் இறக்கிவிடப்படுவதாகவும் தெரிவிக்கப்பட்டது.

கொடிகாமம் பஸ் நிலையத்தில் போககுவரத்துச்சபை பஸ்கள் தவிர்ந்த ஏனைய தனியார் வாகனங்களை நிறுத்தி வைப்பதைத் தடுக்குமாறு இப்பகுதி மக்கள் பிரதேச சபைத் தலைவரைக் கோரியுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. (ஒ-117)

## வடக்கு - கிழக்குப் பிரதேசத்தில்

# எரிபொருள் நிலைய புனரமைப்பு அடுத்த ஆண்டே நிதி ஒதுக்கீடு

அரியாலை,ஓக.19

வடக்கு - கிழக்கு மாகாணத்தில் உள்ள எரிபொருள் விற்பனவு நிலையங்களை புனரமைப்பதற்கு 2003ஆம் ஆண்டிற்கான நிதி ஒதுக்கீட்டிலேயே இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் அதற்குரிய நிதியை ஒதுக்கவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் தலைமைக்காரியாலய அதிகாரிகள் கொண்ட குழு ஒன்று அண்மையில் யாழ்ப்பாணத்திற்கு விஜயம் ஒன்றை மேற்கொண்டது.

அந்தக் குழுவினர் யாழ். குடாநாட்டில் உள்ள எரிபொருள் விற்பனவு நிலையங்களுக்கு சென்று பார்வையிட்டு அவற்றின் செயற்பாடுகள் மற்றும் குறைபாடுகளை கேட்டறிந்தனர்.

யுத்த அனர்த்தங்களினால் சேதமடைந்திருக்கும் எரிபொருள் விற்பனவு நிலையங்களை உடனடியாக புனரமைக்கக் கூடிய சாத்தியக் கூறுகள் தற்போது இல்லை என்றும் -

இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் அடுத்த ஆண்டுக்குரிய நிதி ஒதுக்கீட்டிலேயே அதற்கான நிதியை ஒதுக்கவுள்ளதாகவும் -

அந்தக் குழுவின் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

(ஒ-17)

## திருட்டு...

(07ஆம் பக்கத் தொடர்ச்சி)

டிச் செல்லல் ஆகிய' நடவடிக்கைகளை பொலீஸாரினால் மட்டும் தடுத்து நிறுத்திவிட முடியாதெனப் பொலீஸார் நம்புகிறார்கள்.

சாரதியொருவர் அறிமுகமில்லாத நபர் ஒருவருக்கு வாடகைக்கு வாகனத்தை எடுத்துச்செல்வதாயின், அந்நபரின் அடையாள அட்டையைப் பெற்றுப் பார்வையிடுவதுடன், தனது வாகனத்தை வாடகைக்கு அமர்த்துபவர் பற்றிய விவரத்தைத் தனது குடும்பத்தவரிடமோ, அயலவரிடமோ தெரிவித்துவிட்டுச் செல்வது பாதுகாப்பானதாகும். அறிமுகமில்லாத ஒருவருக்கு தனது வாகனத்தை வாடகைக்கு எடுத்துச்செல்வதை தவிர்க்க முடியுமாயின் தவிர்த்துவிடுவது பாதுகாப்பானதாகும்.

பொலீஸ் உத்தியோகத்தர் ஒருவா வாகனத்தை வாடகைக்கு அமர்த்த அணுகினால், அவரது தொழில் அடையாள அட்டையைப் பெற்றுப் பார்வையிட்டபின் அவருடன் வாகனத்தை எடுத்துச் செல்வது புத்திசாலித்தனமானதென குற்றத்தடுப்பு நடவடிக்கைப் பொலீஸ் உயரதிகாரியொருவர் குறிப்பிட்டார்.

சாரதியொருவர் தான் செலுத்திச் செல்லும் வாகனத்தை பாதுகாப்பற்ற இடத்தில் நிறுத்தாமல், அதற்கெனக் குறித்தொதுக்கப்பட்ட இடத்தில் நிறுத்திவைப்பது திருட்டுக்களை தவிர்த்துக் கொள்வதற்கான ஒரு வழியாகுமென குறிப்பிட்ட பொலீஸார், அப்படி முடியாத சந்தர்ப்பத்தில் பாதுகாப்பு உபகரணங்களைப் பொருத்தி வைப்பது நன்மை பயக்கும் எனவும் கருத்துத் தெரிவித்துள்ளனர்.

எப்படியிருப்பினும், வாகனத் திருடர்கள்மேல் பொலீஸார் எப்போதும் ஒரு கண் வைத்துள்ளனர். இன்று வரை நாடுபூராகவும் சுமார் ஆயிரம் வாகனத் திருடர்கள் இருப்பதாகக் கணக்கிடப்பட்டுள்ளது. அவர்களுடைய அடுத்த இலக்கு உங்களுடைய வாகனமாகவுமிருக்கலாம். எனவே முன்னெச்சரிக்கையாக இருப்பது பயனுள்ளதாகும். ☆

# நல்லூர் உற்சவகால சிறப்பம்சம்

(7ஆம் திருவிழா)



## அலங்காரக் கந்தனே அருளிடு!

வேல் முருகா வேல் முருகா
வேதனைகள் முடித்து விடு!
மால் மருகா மால் மருகா
மாநிலம் சிறக்க அருளிடு - உன்
கால் பிடித்துக் கதறுகிறோம்
கவலைகள் யாவும் போக்கிடு!
ஆல்போல் வாழ்வு தழைக்க
அலங்காரக் கந்தனே அருளிடு!

- த.அஜந்தகுமார்,
வதிரி.

## ஈசனே இமையோர் செல்வா

தேசனே சிவனார் மைந்தா!
திருவெலாம் செழித்த குன்றின்
ஈசனே இமையோர் செல்வா!
ஈழநன் நாட்டு நல்லூர்
வாசனே வையம் வாழ
வளமெலா முடைய அன்பு
நேசனே உன்னை யல்லால்
நினைப்பது யாரைத் தானோ!

- சி.சக்திகிரீவன்.

## வள்ளி மணவாளா!

நல்லை நகர் வீற்றிருந்து
நாநிலத்தை யாட்சி செய்யும்
வள்ளிமண வாளனைத் துதித்தால் எல்லையில்லா
இன்பம் பெருகி வரும்
ஏழ்மை பறந் தோடும்
தொல்லையில்லா வாழ்வு மலரும்

- ரவீந்திரன்
நல்லூர்.

## வேலின் பயன் என்ன?

*வரந்தரும் அமுத ஊற்றே!*
*வாழ்வின் ... மெய்ப் பருதி நீயே*
*நிரந்தர அமைதிப் பாட்டை*
*நினைவினிற் பதிக்கும் மின்னே!*
*தரம்,பலம் பார்த்திடாமல்*
*தழுவுஞ்சந் தனத்தேன் காற்றே*
*விரதங்கள் பிடிப்போம்; எங்கள்*
*விழுமியம் உயர்த்து வாயே!*

*கவிதையை இரசிக்கும் வேலா!*
*இசையிலே கரையும் சீலா*
*அவியெனச் சொரியும் அன்புக்*
*கண்ணீரில் வளருந் தீயா?*
*நவமகன் நீயா? ஆண்ட*
*பழமையின் வேரா? நல்லூர்த்*
*தவிசெழுந் தலைவா..... எம்மைக்*
*காக்காட்டில் உனக்கேன் வேல்? தா!*

- த.ஜெயசீலன்.

## கேட்ட வரமருள்வாய்...

இன்பத்தமிழ் வாசமெல்லாம் இனிதாய்
ஈழத்திரு நாட்டினில் பரவு வழி செய்குவாய்!
துன்பமெல்லாம் நீக்கியெம்மினம்
சிறக்க வரமொன்றருள்வாய்!
மாண்பொலி நல்லூர் நகருறை முருகா!
சென்னிமேல் கையது கூப்பினோம்
தமிழ்மொழி யெடுத்துனை இறைஞ்சினோம்
கேட்டவரமருள்வாய் எமக்கு.

- இதயநிலா,
நெற்கொழு.

# குடாநாட்டு சமாதான நீதிவான்கள் விவரங்கள் நூல்வடிவில் தொகுப்பு

யாழ்ப்பாணம்,ஓக.19

வடக்கு - கிழக்கு மாகாணத்தில் 1970 ஆம் ஆண்டிற்கு பின்னர் நியமனம் பெற்ற சமாதான நீதிவான்களின விவரத் தொகுப்பு நூல் வடிவில் விரைவில் வெளியிடப்படவுள்ளது.

1970 ஆம் ஆண்டின் பின்னர் நியமனம் பெற்ற சமாதான நீதிவான்கள் தமது முழுப்பெயர், பதிவு இலகம், முகவரி போன்ற விவரங்களுடன் எதிர்வரும் 30 ஆம் திகதிக்கு முன்னர் 'பணிப்பாளர், ஹேமலதா செல்வராஜா குழந்தைகள் நலநிதியம் (HSCMF) புலவர் வீதி, நவாலி வடக்கு, மானிப்பாய்' என்ற முகவரிக்கு அனுப்பிவைக்கும்படி மேற்படி நிதியம் கேட்டுள்ளது. (ம)

## கண்ணீர் அஞ்சலி



செவிப்புலன் வலுவற்றோர் புனர்வாழ்வு நிறுவன அங்கத்தவர்

### திருமதி மோகனதாஸ் வதனி

அவர்கள் நேற்று (18.08.2002) ஞாயிற்றுக்கிழமை இறைவனடி சேர்ந்துள்ளார். அவரின் மறைவையொட்டி துயருறும் அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த கவலையைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

*அன்னாரது ஆத்மா சாந்தியடைவதாக!*

**செவிப்புலன் வலுவற்றோர் புனர்வாழ்வு நிறுவனம்,**
**சீனியர் லேன், கலட்டி.** (7233)

தலைவர், செயலாளர்,
பொருளாளர்,
அங்கத்தவர்கள்.

## மரண அறிவித்தல்கள்

### கனகசபை இரத்தினசபாபதி

(ஓய்வுபெற்ற உபதபால் அதிபர் - வாதரவத்தை)

புத்தூர், வாதரவத்தையைச் சேர்ந்த கனகசபை இரத்தினசபாபதி அவர்கள் நேற்று (18.08.2002) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற கனகசபை - பாக்கியம் தம்பதிகளின் புதல்வனும் காலஞ்சென்ற நமசிவாயம்-இளையபிள்ளை தம்பதிகளின் மருமகனும் நாகபூரணத்தின் அன்புக்கணவரும் பிறேமகுமாரி(உபதபால் அதிபர் - வாதரவத்தை) அவர்களின் பாசமிகு தந்தையும் காலஞ்சென்றவர்களான பத்மநாதன், நாகபூரணம் மற்றும் விமலாதேவி ஆகியோரின் அன்புச் சகோதரரும் இராமநாதன், பொன்னுச்சாமி ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (19.08.2002) திங்கட்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்றுப் பிற்பகல் 3.00 மணியளவில் வாதரவத்தை இந்து மயானத்தில் பூதவுடல் தகனஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*வாதரவத்தை,*
*புத்தூர்.* (7236)

தகவல்:
அன்பு மனைவி,
இ.பிரேமகுமாரி (மகள்)

### திருமதி அன்னம்மா இராமலிங்கம்

இல.42, இராசவீதி, நல்லூரைப் பிறப்பிடமாகவும் நீர்கொழும்பை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி அன்னம்மா இராமலிங்கம் அவர்கள் 17.08.2002 சனிக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான தம்பு - செல்லாச்சி தம்பதிகளின் அன்புப் புதல்வியும் காலஞ்சென்ற இராமலிங்கத்தின் துணைவியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்று (18.08.2002) ஞாயிற்றுக்கிழமை நீர்கொழும்பிலுள்ள அவரது இல்லத்தில் நடைபெற்றன.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*38, இராசவீதி,*
*நல்லூர்.* (7238)

தகவல்:
திருமதி க.விமலநாதன்
(பெறாமகள்)

### Dr.த.இராசையா

(மெடி எய்ட்ஸ் - மானிப்பாய்)

கொக்குவிலைப் பிறப்பிடமாகவும் சுதுமலை வடக்கை வசிப்பிடமாகவும் கொண்ட Dr.த.இராசையா சனிக்கிழமை (17.08.2002) கொழும்பில் இறைபதம் அடைந்துவிட்டார்.

அன்னார் யோகாம்பிகையின் அன்புக் கணவரும், காலஞ்சென்றவர்களான சின்னாச்சி - தம்பு ஆகியோரின் மகனும், காலஞ்சென்றவர்களான மனோன்மணி - அருமைத்துரை ஆகியோரின் மருமகனும் காலஞ்சென்ற கனகசபை, செல்லையா, காலஞ்சென்ற திருமதி அன்னம்மா, முத்தையா, திருநாவுக்கரசு, திருமதி நகுலேஸ்வரி விஜயரட்ணம், மாணிக்கவாசகம் ஆகியோரின் சகோதரனும் வசந்தி, வத்சலன் (கனடா), ஜனார்த்தனன் (வசந்திஜா எலக்ரிக்கல்ஸ்), சிவகுமார் (கனடா), ஜெயந்தி (கொழும்பு), சுகந்தி, ஸ்ரீகணேசன் ஆகியோரின் பாசமிகு தந்தையும், ஞானராஜா (GTZ கணக்காளர்), அனுராதா (கனடா), வசந்தி மகாதேவி (கனடா), தனராஜா (Greenland's hotal, Colombo), செல்வச்சந்திரன் (ஆசிரியர், சென்.ஆன்ஸ்) ஆகியோரின் பாசமிகு மாமனாரும் தர்ஷனி (விவசாய பீடம்), தாரணி (Top's Marketting, Colombo), லோகினி (உடுவில் மகளிர் கல்லூரி), செந்தூரன் (கனடா), ராகுலன் (கனடா), அரவிந்தன் (கனடா), திபாகர் (யாழ்.இந்துக் கல்லூரி), திவ்யா (வேம்படி மகளிர் கல்லூரி), தினேஷா, சிந்துஜா (கனடா), அபிரா (கனடா), மயூரன் (Income tax Consultant, Australia), பிரதீபன் (Computer Instructor), பார்த்தீபன் (Royal institute), ஆதித்யா (Kingston international College), தர்மிகா, மிதுஷன், சுகன்யா ஆகியோரின் பாசமிகு பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (20.08.2002) செவ்வாய்க்கிழமை முற்பகல் 10.30 மணியளவில் சுதுமலையில் உள்ள அன்னாரின் இல்லத்தில் நடைபெற்றுப் பூதவுடல் தகனக்கிரியைக்காக பிப்பிலி இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளும்படி கேட்டுக்கொள்கின்றோம்.

*சுதுமலை வடக்கு,*
*மானிப்பாய்.*
*T.P: 021:3572* (7237)

தகவல்:
இ.ஜனார்த்தனன் (மகன்),
Lion செ.ஞானராஜா (மருமகன்).

## இலங்கை வங்கி கிளை திறப்பு

யாழ்ப்பாணம்,ஓக.19

இலங்கை வங்கியின் புதிய கிளை ஒன்று இன்று திங்கட்கிழமை காலை 9 மணிக்கு திருநெல்வேலியில் திறக்கப்படவுள்ளது.

இலங்கை வங்கியின் சிரேஷ்ட பிரதிப் பொதுமுகாமையாளர் ஜே. எவ்.ஜி.டீசில்வா இந்தக் கிளையைத் திறந்துவைப்பார்.

யாழ்.பல்கலைக்கழக துணைவேந்தர் பொ.பாலசுந்தரம்பிள்ளை, யாழ். மாவட்ட மேலதிக அரச அதிபர் து. வைத்திலிங்கம் ஆகியோர் இந்த நிகழ்வுக்கு பிரதம விருந்தினர்களாகக் கலந்துகொள்ளவுள்ளனர். (ஓ-4)

## நல்லைக்கந்தன் ஆலயச் சூழலில் இன்று நடப்பவை

யாழ்ப்பாணம்,ஓக.19

நல்லூர் கந்தசுவாமி ஆலய உற்சவத்தை ஒட்டி ஆலயச் சூழலில் இடம்பெற்றுவரும் நிகழ்ச்சிகளில் இன்று நடைபெறவுள்ள நிகழ்வுகள் வருமாறு:-

❋ நல்லை ஞானசம்பந்தர் ஆதீனத்தில் காலை விசேட பூசை, தீபாராதனை மற்றும் பிற்பகல் புராணபடனம்.

❋ இளங்கலைஞர் மன்றம் துர்க்கா மணிமண்டபத்தில் நடத்தும் இசை ஆராதனை நிகழ்வில் மாலை தர்சனா நவவேந்திரனின் பாட்டுக் கச்சேரி, வயலின் - ஆர்.ராதாகிருஷ்ணன், மிருதங்கம் - எஸ்.துரைராசா, கெஞ்சிரா - கே.அனந்தகோபன்.

❋ வடபிராந்திய இந்து சமயப் பேரவையின் ஏற்பாட்டில் அறுபத்து மூவர் நாயன்மார் குருபூசை மடத்தில இடம்பெறும் தெய்வீகச் சொற்பொழிவில் மாலை 6 மணிக்கு 'நேர்த்திக்கடன்களும் வழிபாடும்' என்ற தலைப்பில் சைவப்புலவர் நித்திய சசீதரனின் உரை நிகழ்வு இடம்பெறும். (ரி)

---

## பண்டா....

(08ஆம் பக்கத் தொடர்ச்சி)

பட்டபடி தமிழ்மொழி விசேட உபயோகச் சட்டம் 1966 ஜனவரி 8ஆம் திகதி நாடாளுமன்றத்தில் அறிமுகப்படுத்தப்பட்டது. இச்சட்டம் பின்வரும் விடயங்களில் தமிழ்மொழி பயன்படுத்தப்படுவதனை உறுதிப்படுத்தியது.

1. வடக்கு - கிழக்கு மாகாணங்களில் சகல அரசாங்க மற்றும் பொது நடவடிக்கைகள், பொது ஆவணங்கள் பேணப்படுதல் போன்றன தமிழிலேயே மேற்கொள்ளப்படும்.

2. தமிழ்மொழிச் சட்டத்தையும் அதன் வரைமுறைகளையும் நடைமுறைப்படுத்துதல் தொடர்பான பின்வருவன தமிழில் வெளியிடப்படும்.

அ) சகல சட்டமூலங்களும், சட்டங்களும்.

ஆ) சகலவிதமான கட்டளைகள, பிரகடனங்கள்.

இ) அரசாங்க வர்த்தமானி அறிவித்தல், சகலவிதமான அரசாங்க வெளியீடுகள் மற்றும் சுற்றுநிருபங்கள, அரசாங்கத்தினால் வெளியிடப்படும் பத்திரங்கள்.

1966 ஆம் ஆண்டு இச்சட்டமூலம் நாடாளுமன்றத்துக்கு கொண்டுவரப்பட்டபோது, எதிர்க்கட்சியான ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியும் சிங்களத் தீவிரவாதிகளும் இதனைக் கடுமையாக எதிர்த்தனர்.

இடதுசாரிக் கட்சிகள் உட்பட தொழிற்சங்கங்களும் எதிர்த்தன. அரச தொழிற்சங்கங்கள் வேலைநிறுத்தப் போராட்டதிலும் இறங்கின. ஆர்ப்பாட்டங்களும் நடைபெற்றன.

இந்த ஆர்ப்பாட்டத்தின்போது பொலீஸ் துப்பாக்கிப்பிரயோகம் செய்ததில் இரத்தினசாரதேரர் எனும் பெயருடைய பௌத்தபிக்கு ஒருவர் கொலலப்பட்டார். இந்த எதிர்ப்புகளுக்கு மத்தியிலும் சட்டம் நிறைவேற்றப்பட்டது. ஆனால், நடைமுறையில் செயற்படுத்துவதற்கான நடவடிக்கைகள் பெரிதாக மேற்கொள்ளப்படவில்லை.

தொடர்ந்து ஒப்பந்தத்தின் ஏனைய விடயங்களை அமுலாக்குவது தொடர்பான முயற்சிகளிலும் அரசு இறங்கவில்லை. இதனால் தமிழரசுக் கட்சி இதற்கு எதிர்ப்புத் தெரிவித்து, 1968 இல் அரசாங்கத்தை விட்டு வெளியேறியது.

இதற்கு முன்னரே 1968 ஜுலை 19ஆம் திகதி திருகோணமலை கோணஸ்வரர் கோயில் பகுதியைப் புனித பிரதேசமாக்கும் முயற்சி தொடர்பாக அரசு முதலில் ஆதரவு தெரிவிததது.

பின்னர் பௌத்த மத நிறுவனங்களின் எதிர்ப்பினால் அதை நிராகரித்தது. அதைத் தொடர்ந்து உள்ளூராட்சி அமைச்சர் மு.திருச்செல்வம் தனது பதவியை இராஜினாமாச் செய்தார்.

## கண்ணீர் அஞ்சலி



நவீல்ட் பாடசாலை பழைய மாணவர் சங்க அங்கத்தவர்

### திருமதி மோகனதாஸ் வதனி

அவர்கள் நேற்று (18.08.2002) ஞாயிற்றுக்கிழமை இறைவனடி சேர்ந்துள்ளார். அவரின் மறைவையொட்டி எமது அங்கத்தவர்கள் அனைவரும் ஆழ்ந்த துயரடைந்துள்ளார்கள். அமரருக்கு எமது கண்ணீர் அஞ்சலியைக் காணிக்கையாகச் சமர்ப்பிக்கின்றோம்.

*அவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.*

*மீளாத்துயரத்தில் ஆழ்ந்துள்ள:*
தலைவர், உப செயலாளர்,
பொருளாளர், பழைய மாணவர்கள்.

**நவீல்ட் பாடசாலை,**
**பழைய மாணவர் சங்கம்.** (7232)

## மரண அறிவித்தல்கள்

### திருமதி ஞானகலை நவரட்டினம்

முன்னர் யாழ்ப்பாணம் நாவலர் வீதி, ஆனைப்பந்தியடியில் வசித்தவரும், முன்னாள் ஆனைப்பந்தியடி அடைவு கடை உரிமையாளருமாகிய திருமதி ஞானகலை நவரட்டினம் லண்டனில் நேற்று (18.08.2002) ஞாயிற்றுக்கிழமை சிவபதம் அடைந்துவிட்டார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் லண்டனில் நடைபெறும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*இல: 105, நாலாம் குறுக்குத்தெரு,*
*யாழ்ப்பாணம்.* (7229)

தகவல்:
திருமதி சு.மகாதேவி
(சகோதரி)

### வைரமுத்து சண்முகராசா

(முன்னாள் துறைமுக கூட்டுத்தாபன உத்தியோகத்தர், திருகோணமலை)

கன்னியாய் வீதி, திருகோணமலையைப் பிறப்பிடமாகவும் சாவகச்சேரியை வசிப்பிடமாகவும் தற்போது கனடாவில் வசித்தவருமாகிய வைரமுத்து சண்முகராசா 17.08.2002 சனிக்கிழமை கனடாவில் காலமானார்.

அன்னார் திருகோணமலையைச் சேர்ந்த காலஞ்சென்ற வைரமுத்து மற்றும் மனோன்மணி தம்பதிகளின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான கதிரவேலு - பொன்னம்மா தம்பதிகளின் அன்பு மருமகனும் மகேஸ்வரியின் அன்புக் கணவரும் ஜெயசாந்தி, செந்தில்குமரன், விக்னா ஆகியோரின் அன்புத் தந்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

*கேணிகிணற்றடி ஒழுங்கை,*
*துன்னாலை கிழக்கு, கரவெட்டி.*

தகவல்:
சி.சிவராசா
(பெறாமகன்)

*Mrs. S.Maheswary*
*63, Clarion Cres,*
*Markaam Ont., L3 S3 M4, Canada.*
**கஜந்தன்** T.P.: 416-4386259 (7234)

### திருமதி நல்லபிள்ளை கணபதிப்பிள்ளை

மானிப்பாயைச் சேர்ந்த திருமதி நல்லபிள்ளை கணபதிப்பிள்ளை அவர்கள் நேற்று (18-08-2002) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற கணபதிப்பிள்ளை அவர்களின் அன்பு மனைவியும் திருமதி ந.ஜெயலட்சுமி(இளைப்பாறிய இசை ஆசிரியை, மானிப்பாய் இந்துக் கல்லூரி, றோயல் கல்லூரி-கொழும்பு), Dr.சிவனடியான், திருமதி அ.ஜெகதீஸ்வரி ஆகியோரின் அன்புத் தாயாரும் நடராஜமூர்த்தி (கொழும்பு), சௌந்தரநாயகி, அரியராசா(நிலா ஒளி-சங்கானை) ஆகியோரின் அருமை மாமியாரும் அரவிந்தன்(U.K), ரகுநந்தன்(U.K), ஜனகன் (U.K), ரமணன்(Seylan Bank, Wellawatte), கபிலன்(U.K), Dr.அகிலன், கபிலன்(மருத்துவபீடம்-ரஷ்யா), ஜனனி (பெங்களூர் பல்கலைக்கழகம்), யாழினி(4ஆம் வருடம், மருத்துவபீடம், யாழ்.பல்கலைக்கழகம்), தமிழினி (3ஆம் வருடம்,வணிகத்துறை, யாழ். பல்கலைக்கழகம்) ஆகியோரின் அன்புப் பேர்த்தியாருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று(19-08-2002) திங்கட்கிழமை காலை 9.00 மணியளவில் சங்கரத்தையிலுள்ள அவரது இல்லத்தில் நடைபெற்றுப் பூதவுடல் தகனக்கிரியைக்காக வழுக்கையாறு மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்று கொள்ளவும்.

*சங்கரத்தை, வட்டுக்கோட்டை.* (7235)

தகவல்:
Dr.க.சிவனடியான்

### கலைவாரிதி
### சின்னத்துரை சிவசொரூபநாதபிள்ளை
### (சின்னராசா)

(இளைப்பாறிய அஞ்சல் திணைக்கள நிர்வாக உத்தியோகத்தர்)

வட்டுக்கோட்டை, சிவன்கோயிலடியைச் சேர்ந்த சின்னத்துரை சிவசொரூபநாதபிள்ளை அவர்கள் நேற்று (18.08.2002) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற பரதபத்தினி அம்மாவின் அன்புக் கணவரும் சிற்பரூபன் (முன்னாள் இரசாயனவியலாளர் - காங்கேசன் சீமெந்துக் கூட்டுத்தாபனம், ஓமான்), திருமதி கனகபத்தினி, திருமதி ஞானபத்தினி திருமதி கானகோகிலம் (ஆசிரியை, சண்டிலிப்பாய் வடக்கு தமிழ் கலவன் பாடசாலை), திருமதி வசந்தகோகிலம், திருமதி இசைவாணி (லண்டன்), சரவணபவன் ஆகியோரின் பாசமிகு தந்தையும் பொ.ஜெயரத்தினம், இரா.ஜெயமோகன், ந.ஜெயம், த.சற்குணராஜா, அ.சேரலாதன், திருமதி சி.அன்புக்கரசி ஆகியோரின் அன்பு மாமனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (19.08.2002) திங்கட்கிழமை மாலை 3.00மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்றுப் பூதவுடல் தகனக்கிரியைக்காக வழுக்கையாறு இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*சிவன்கோயிலடி,*
*வட்டு.மேற்கு, வட்டுக்கோட்டை.* (7240)

தகவல்:
சி.சரவணபவன் (மகன்)

# ஜனாதிபதியை அவரு....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பட்டுள்ள அதிகாரத்தைப் பயன்படுத்தி டிசெம்பர் 5 இற்குப் பின்னர் தன்னிச்சையாக நாடாளுமன்றத்தைக் கலைத்து விடலாம் என்று அச்சம் தெரிவிக்கப் படுகின்றது.

அதனாலேயே அரசு அவசரமாக ஜனாதிபதியின் அந்த அதிகாரத்தை வெட்டுவதற்கு அரசமைப்புத் திருத்தம் கொண்டுவரவுள்ளது.

ஜனாதிபதி டிசெம்பர் 5 இற்குப் பிறகு நாடாளுமன்றத்தைக் கலைக்க மாட்டார். என அரசுடன் புரிந்துணர்வு உடன்படிக்கை செய்து கொள்வார் என்றும் -

தாம் நாடாளுமன்றத்தை அப்படிக கலைக்க மாட்டேன் என சபாநாயகருக்கு எழுத்துமூலம் உறுதி அளிப்பார் என்றும் - ஜனாதிபதியின் நம்பிக்கைககுரியவர்கள் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுக்குத் தகவல் கொடுத் தனர்.

இதுபற்றி ஆளும் கட்சியின் அரசியல் விவகாரக்குழு கடந்த 15 ஆம் திகதி இரண்டாவது முறையாகக் கூடி ஆராய்ந்தது.

ஜனாதிபதி எதையும் சொன்னபடி செய்யமாட்டார். அவரை நம்ப முடியாது. அதனால் அரசமைப்பு திருத்தம் கொண்டு வந்து தன்னிச்சையாக நாடாளுமன்றத்தைக் கலைக்கும் அவருடைய அதிகாரத்தை விரைவில வெட்ட வேண்டும் என்று அங்கு முடிவு செய்யப்பட்டது.

அந்த அரசமைப்புத் திருத்தத்தை நிறைவேற்றுவதற்கு வேண்டிய மூன்றில் இரண்டு பெரும்பான்மையைப் பெறுவதற்கு பொதுமக்கள் ஐக்கிய முன்னணியின் 19 எம்.பிக்கள் அதற்கு ஆதரவாக வாக்களித்தால் போதும்.

ஆனால், பொதுமக்கள் ஐக்கிய முன்னணி எம்.பிக்களில் முன்னாள் அமைச்சர்கள் சிலர் உட்பட 35இற்கு அதிகமான எம்.பிக்கள் அரசமைப்புத திருத்தத்தை ஆதரித்து வாக்களிக்க உறுதி அளித்திருக்கிறார்கள் என்று அரசியல் விவகாரக் குழுவில் சுட்டிக் காட்டப்பட்டது.

பொதுமக்கள் ஐக்கிய முன்னணி எம்.பிக்கள் அந்த அளவுக்கு ஜனாதிபதியில் நம்பிக்கை இழந்து விட்டார்கள். அவர் தாம் சொன்னபடி செய்ய மாட்டார் என்பதற்கு உதாரணமாக இரண்டு சம்பவங்களை அவர்கள் எடுத்துக்காட்டுகிறார்கள்.

1. நிறைவேற்று அதிகாரமுடைய ஜனாதிபதி ஆட்சி முறையை 1995 ஜூலை 15 இற்குள் ஒழித்து விடுவதாக ஜே.வி.பிக்கு ஜனாதிபதி உறுதி அளித்தார். அதை அவர் நிறைவேற்றவில்லை.

2. கடந்த வருடம் தாம் நாடாளுமன்றத்தைக் கலைக்கப் போவதில்லை என்று உறுதி அளித்தார். அதன்படி அவர் நடக்கவில்லை. திடுதிப்பென்று நாடாளுமன்றத்தைக் கலைத்துவிட்டார்.

இவரை நம்பி எப்படி இவரை ஆதரித்துக்கொண்டு இருப்பது என்று பொ.ஐ.முன்னணி எம்.பிக்கள் பலரும் கேட்கிறார்கள். இதன் காரணமாகவே நாடாளுமன்றத்தைக் கலைக்கும் ஜனாதிபதியின் அதிகாரத்தை வெட்டுவதற்கு ஒத்துழைப்பது என அவர்கள் முடிவு செய்திருக்கிறார்கள். (ம)

## கஞ்சா வைத்திருந்த நபருக்குத் தண்டனை!

217 கிராம் கஞ்சா வைத்திருந்தவர் குற்றத்தை ஒப்புக்கொண்டதைத் தொடர்ந்து, அந்த நபருக்கு மல்லாகம் மாவட்ட நீதிபதி பா.சுப்பிரமணியம் 10 ஆயிரம் ரூபா தண்டப்பணம் செலுத்தும்படியும் - 2ஆயிரம் ரூபாவை தாமப்பணமாக மாவட்ட சிறுவர் பாதுகாப்பு நிதியத்திற்கு வழங்கும்படியும் தண்டனை விதித்தார்.

மதுவரித்திணைக்களத்தினால் கைதுசெய்யப்பட்ட பண்டத்தரிப்பு சாலையடியைச் சேர்ந்த நபருக்கே இத தண்டனை வழங்கப்பட்டுள்ளது.(ஒ-86)

## மல்லாகம் மாவட்ட நீதிமன்றத்தில்

வழக்கு இலக்கம்: மணநீக்கம்/151.

விமலராஜ் பெண் விஜயபிருந்தா அல்லது பிருந்தா,
இராமநாதன் வீதி,
உடுவில் கிழக்கு,
சுன்னாகம்.

- வழக்காளி -

எதிர்

இரத்தினசிங்கம் விமல்ராஜ்,
மே/பா:ந.இரத்தினசிங்கம்,
ஞானவயிரவர் வீதி,
கோண்டாவில் கிழக்கு,
கோண்டாவில்.

- எதிராளி -

### பின்னுறுதித் தீர்வை

மேற்படி இலக்க வழக்கு மல்லாகம் மாவட்ட நீதிபதி திருவாளர் பா.சுப்பிரமணியம் அவர்கள் முன்னிலையில் 2002ஆம் ஆண்டு மே மாதம் 03ஆந் திகதி இம்மன்றில் கூப்பிடப்பட்ட பொழுது வழக்காளியும் அவரது பதிவுபெற்ற சட்டத்தரணி திரு.ச.சிவரூபன் அவர்களும் மன்றில் சமுகமாகயிருக்க எதிராளியோ அவரது பதிவுபெற்ற சட்டத்தரணியோ மன்றுக்குச் சமுகமளிக்காத காரணத்தினால் அழைப்புக் கட்டளையை பத்திரிகையில் பிரசுரம் செய்யுமாறு செய்யப்பட்ட கட்டளைக்கமைய, 2002ஆம் ஆண்டு மே மாதம் 19ஆம் திகதிய தேசிய நாளேட்டில் அழைப்புக் கட்டளையை பிரசுரம் செய்திருந்தும் 2002ஆம் ஆண்டு மே மாதம் 31ஆம் திகதி எதிராளியோ அல்லது அவர் சார்பாக சட்டத்தரணி ஒருவரோ மன்றில் சமுகமாகயிருக்காத காரணத்தினால் இவ்வழக்கு அன்றைய தினம் ஒருமுக விளக்கத்திற்கு நியமிக்கப்பட்டு பின்னர் 2002ஆம் ஆண்டு ஜூன் மாதம் 07ஆம் திகதி ஒருமுக விளக்க சாட்சியங்கள் பதியப்பட்டு பின்னர் இம்மன்று திருப்தி எனக்கண்டு, 2002ஆம் ஆண்டு ஜூன் மாதம் 14ஆம் திகதி பின்வருமாறு தீர்ப்பு வழங்கப்பட்டது.

எதிராளி வழக்காளியை வன்ம உறவுறுப்புச் செய்துள்ளாரெனக் கண்டு 1998ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 09ஆம் திகதி வழக்காளிக்கும் எதிராளிக்குமிடையே நடைபெற்ற பதிவுத் திருமணத்தை இரத்துச் செய்து தீர்ப்பு வழங்குவதுடன் வழக்காளி இன்றிலிருந்து தனது கன்னிப் பெயரைப் பாவிக்கலாம் எனவும் தீர்ப்பு வழங்கப்படுகின்றது.

இப்பின்னுறுதித் தீர்வையினை எதிராளி மன்றில் சமுகமளிக்காத காரணத்தினால் எதிராளிக்கு உரிய முறையில் அறியக்கூடிய வகையில் சேர்ப்பித்து அல்லது தேசிய நாளேட்டில் பிரசுரித்து இப்பிரசுரம் வெளியான நாளிலிருந்து மூன்று மாதகாலத்திற்குள் அக்கறையுள்ள ஆள் எவரேனும் இம்மன்றில் தோன்றி இப்பின்னுறுதித் தீர்வையை ஏன் முற்றான தீர்வையாக்கக் கூடாது எனத் தகுந்த காரணம் காட்டத் தவறினால் இப்பின்னுறுதித் தீர்வை முற்றாக்கப்பட்டு முற்றான தீர்வையாக்கப்படும்.

2002ஆம் ஆண்டு ஜூலை மாதம் 18ஆம் திகதி.

| | |
|---|---|
| என்னால் வரையப்பட்டது. | ஒப்பம் (பா.சுப்பிரமணியம்) |
| ச.சிவரூபன் | மாவட்ட நீதிபதி, |
| வழக்காளியின் சட்டத்தரணி | மல்லாம். |

நீதிமன்றக் கட்டளைப்படி
செ.விக்னேஸ்வரமூர்த்தி
பதிவாளர்/ ப.பிஸ்கால்/ சமாதான நீதிவான்,
மாவட்ட நீதிமன்றம், மல்லாகம்.
(C-23226) (18.07.2002)

## மரண அறிவித்தல்கள்

### திருமதி மோகனதாஸ் வதனி

நயினாதீவைப் பிறப்பிடமாகவும் கொட்டடியை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி மோகனதாஸ் வதனி அவர்கள் நேற்று (18.08.2002) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் மோகனதாஸ் (தீவக கல்வி வலயம், வேலணை), அவர்களின் அன்பு மனைவியும், நல்லையா - சொர்ணம்மா (தாவடி வடக்கு காளிகோயில்) தம்பதிகளின் அன்பு மகளும், வீரவாகு சற்குணம் (நயினாதீவு 2ஆம் வட்டாரம்) ஆகியோரின் அன்பு மருமகளும், நித்தியகலா, குமுதினி காலஞ்சென்ற மாலினி மற்றும் ரஜனி, கர்சலா பிரகலாதன் ஆகியோரின் அன்புச் சகோதரியும், கணேசலிங்கம் மனோகரன், ஆனந்தராஜ், தேவிகா, தேவதாஸ் காலஞ்சென்ற ரேணுகா ஆகியோரின் மைத்துனியும் சுந்தரராயனின் சகலியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (20.08.2002) செவ்வாய்க் கிழமை பி.ப. 3.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக வில்லூன்றி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

67/15, [illegible]
சீனிவாசகம் வீதி,
கொட்டடி, யாழ்ப்பாணம். (7244)

தகவல்:
வி.மோகனதாஸ்
(மோகன் - கணவர்)

### ஆறுமுகம் வீரகத்தி

கரவெட்டி மத்தி, அரச தோட்டத்தைச் சேர்ந்த ஆறுமுகம் வீரகத்தி அவர்கள் நேற்று (18.08.2002) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற ஆசைப்பிள்ளையின் அன்புக் கணவரும் குலசிங்கம் (குலம் - கொழும்பு), குலச்சந்திரன் (கட்டைவேலி ப.நோ.கூ. சங்கம்), குலசேகரம் (லண்டன்), உதயராணி, ரவீந்திரன், பஞ்சலிங்கம் (லண்டன்), உதயகௌரி (கௌசி - பிரான்ஸ்), குலதேவன் (கொழும்பு) ஆகியோரின் அன்புத் தந்தையும் கருணாகரி (கொழும்பு), கலாரஞ்சிதம், பத்மாவதி (லண்டன்), குகரூபன், தனலக்குமி, மைதிலி (லண்டன்), நகுலேஸ்வரன் (பிரான்ஸ்) ஆகியோரின் அன்பு மாமனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (19.08.2002) திங்கட்கிழமை பி.ப 3.30 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக சோனப்பு மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

அரச தோட்டம்,
கரவெட்டி மத்தி,
கரவெட்டி. (C-23228)

தகவல்:
வீ.குலச்சந்திரன் (மகன்)
(கட்டைவேலி ப.நோ.கூ.சங்கம்,
நெல்லியடி)


யாழ்ப்பாணத்தில் ஏஜண்ட் அன் சப்ஏஜண்ட் தேவை

நம்பர் ① வலி நிவாரணி

இந்தோனேஷிய பாரம்பரிய முதலுதவி

புதிய

சுகந்தமுள்ள தைலம்




வாள் சின்னம் பொறித்த சுக தைலம்

திவ்யாலேபய

ஒப்பற்ற நிவாரணியாக நிரூபிக்கப்பட்டுள்ளது.

☆தலைவலி ☆தொண்டைக் கரகரப்பு
☆பிரயாண அசௌகரியங்கள் ☆தசைப் பிடிப்பு
☆மூக்கடைப்பு ☆பூச்சிக்கடி போன்றவற்றிற்கான

துரிதமாக வரும் விரைவான நிவாரணம்!

யாழ்.தொடர்புகளுக்கு:
347, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

வழங்குபவர்கள்:
RYDER TRADING INTERNATIONAL (PVT) LTD
3-20, மஜஸ்ரிக் சிற்றி, கொழும்பு - 04
தொலைபேசி: 01-595800, (டின்) பக்ஸ்: 01-595799
(7243)



# அகவை அறுபதில் அகமகிழ்கின்றோம்

இன்று (19.08.2002) திங்கட்கிழமை தனது அறுபதாவது அகவையைப் பூர்த்திசெய்யும் எங்கள் அம்மப்பா

வேலுப்பிள்ளை கந்தசாமி (நடராசா)

அவர்களையும் அம்மம்மா

திருமதி றுக்மணி நடராசா

அவர்களையும் சகல வளங்களும் பெற்று சீருஞ்சிறப்புமாய் எல்லாம்வல்ல மாயவன் அருளால் நீடூழி வாழ்க என வாழ்த்துகின்றோம்.

தர்சனா,கர்சனா,
நிதுயா, உமாசாம்பவி
(பேர்த்திமார்கள்)

138A, சேர் பொன். இராமநாதன் வீதி,
யாழ்ப்பாணம். (7246)



# யா/யூனியன் கல்லூரி பழைய மாணவர் சங்கம்

வருடாந்தப் பொதுக்கூட்டமும் ஒன்றுகூடலும்- 2002

மேற்படி கூட்டம் எதிர்வரும் 01.09.2002 ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணிக்கு யூனியன் கல்லூரி மண்டபத்தில் நடைபெற உள்ளது. சகல அங்கத்தவர்களையும் தவறாது கலந்து சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

பிரேரணைகள் யாவும் 31.08.2002 வரை ஏற்றுக்கொள்ளப்படும். 1999-2000 கல்வி ஆண்டில் பல்கலைக்கழகத்திற்கு தெரிவாகிய மாணவர்களைக் கௌரவிக்க இருப்பதால் அவர்கள் அனைவரையும் வருகைதருமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

| | |
|---|---|
| சி.விக்கினராசா | த.வாமதேவன் |
| தலைவர் | செயலாளர் |
| பழைய மாணவர் சங்கம் | பழைய மாணவர் சங்கம் |
| யா/யூனியன் கல்லூரி, | யா/யூனியன் கல்லூரி, |
| தெல்லிப்பழை. | (மருதனார்மடம்) தெல்லிப்பழை. |

(C-23225)



பொருளியற் கல்லூரி
நாவலர்றோட் - யாழ்ப்பாணம்.
கணக்கீடு A/L 2003
கிரயக்கணக்கீடு
ஆரம்பம்:- 20.08.2002
நேரம்:- 9.30 ம.நேரம்
முகுந்தன்
B.B.A.(Hons)
(7242)

நிறைஞ்சனாஸ்
சங்கானை
ரஜனி, விஜயசாந்தி, குஷ்பு நடித்த
மன்னன்
(கலர்)
காட்சிகள்: 11.00, 2.30, 5.30 (புதியநேரம்)
(C-23124)

ராஜா யாழ்ப்பாணம்.
இந்தியாவிலும் இலங்கையிலும்
ஒரே தின வெளியீடு
ரஜனிகாந், மனிசா, கவுண்டமணி நடித்த
பாபா
காட்சிகள்: 10.30, 2.30, 6.00, 9.30
பல வருடங்களுக்குப் பின்னர் இரவு
9.30 மணிக் காட்சி ஆரம்பமாகிறது.
(C-23125)

நாகம்ஸ் சுன்னாகம்
விக்ரம், ஜெயாரே, நாசர்
நடித்த
சாமுராய்
(கலர்)
காட்சிகள்: 11.00, 3.00,(பு.நே.)

# கொழும்புத்துறை பகுதியில் மக்கள் மீளக் குடியமர்வு

அரியாலை,ஓக.19

கொழும்புத்துறையில் நெடுங்குளம் பகுதி தவிர்ந்த ஏனைய பகுதிகளில் மீளக்குடியமர அனுமதி அளிக்கப்பட்டதைத் தொடர்ந்து அப்பகுதியில் மக்கள் மீளக்குடியமர்ந்து வருகின்றனர்.

கொழும்புத்துறை முதலாம், இரண்டாம், மூன்றாம், நான்காம் குறுக்குப பகுதிகளில் மக்கள் மீளக்குடியமர இராணுவத்தினர் அண்மையில் அனுமதி வழங்கியிருந்தனர்.

தற்போது முதலாம் குறுக்குப் பகுதியைத் தவிர ஏனைய பகுதிகளைச் சேர்ந்த மக்கள் மீண்டும் தமது இருப்பிடங்களில் மீளக் குடியமர்வதற்கான முன்னேற்பாடுகளில் தீவிரமாக ஈடுபட்டுவருகின்றனர்.

நேற்றுவரை 10 இற்கும் மேற்பட்ட குடும்பங்கள் இப்பகுதியில் மீளக் குடியமர்ந்துள்ளன. ஏனைய மக்கள் மீளக் குடியமரும் பொருட்டு தமது வீடு வளவுகளைத் துப்பரவு செய்யும் பணியில் ஈடுபட்டுளளனர். (ம-17)

# அரசின் நிதி நடவடிக்கைகளை கையாள புதிய சட்டத் திருத்தம்

கொழும்பு,ஓக.19

அரசு அதன் நிநி நடவடிக்கைகளை உரிய முறையில் மேற்கொள்வதற்கான புதிய சட்ட திருத்தம் ஒன்று விரைவில் கொண்டு வரப்படவுள்ளது.

இந்தத் திருத்தங்களின் பிரகாரம் இலங்கை மத்திய வங்கியின் கடப்பாடுகள் ஒரு முன்னுரிமைத் தேவையைக் கொண்டுள்ளதாக விஸ்தரிக்கப்படவிருக்கின்றன. வங்கிகள் மத்தியில் புதிய கொடுக்கல் வாங்கல் நடைமுறைகள் ஆரம்பிக்கப் படுவதோடு, புதிய சட்டங்களின் கீழ் புழக்கத்தில் உள்ள கணக்கை மேலும் பயனுள்ள வகையில் கையாள்வதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம-9-12)

## முல்லை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அணி புறப்படும் இடத்தில் நேற்றுக் காலை 6 மணி முதல் படகுகளைச் சோதனையிடும் நடவடிக்கைகளைக் கண்காணிப்புக் குழு உறுப்பினர்கள் ஆரம்பித்தனர். "இந்த நடவடிக்கைக்காக சிறந்த முறையில் - நேர்த்தியாக - ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தன" - என்று கண்காணிப்புக்குழுப் பேச்சாளர் ஒருவர் தெரிவித்தார்.

நேற்றுக் காலை 7 மணிக்கு இந்தப் படகுகள் அணி புறப்படுவதாக இருந்தது. ஆனால், படகொன்றின் இயந்திரக் கோளாறு காரணமாக காலை 8.30 மணிக்கே முல்லைத்தீவுக் கரையிலிருந்து படகுகள் புறப்பட்டன. 2 கடல் மைலுக்கு அப்பால் நின்று கடற்படையினர் இந்த படகு அணியை நோட்டமிட்டுக் கொண்டிருந்தனர்.

நேற்று பிற்பகல் 1.30 மணிக்கு படகு அணி வாகரையைச் சென்றடைந்தது. இப்படகுகள் இன்று வாகரையில் இருந்து ஐம்பது புலி உறுப்பினர்களை ஏற்றிக்கொண்டு முல்லைத் தீவுகுத் திரும்பும் என அறிவிக்கப்பட்டது. ஆனால், மொத்தம் எண்பது புலிப் போராளிகள் இப்படகுகள் மூலம் வாகரையிலிருந்து முல்லைத்தீவுக்குப் பயணிப்பர் என்று தெரிவிக்கப்பட்டது.

## விசாரணைக்குழு....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தமிழீழ விடுதலைப் புலிகளை வெறும் கையால் அடித்து விரட்டிவிடலாம் என்று நினைக்கும் அரசியல் கற்றுக் குட்டித்தனம் உடையவர்களல்லர் நாம்.

விசாரணைக் குழு தமது சந்தேகங்களையும் ஊகங்களையும் வெளிப்படுத்தியிருப்பதும், அதில் எமது கட்சிப் பெயரைப் பயன்படுத்தியிருப்பதும் எமக்கு மிகுந்த வேதனையைத் தருகிறது. விசாரணைக்குழுவில் குறிப்பிட்டுள்ள வாகன வசதிகள் எம்மிடம் இல்லை என்பதை மக்கள் அறிவார்கள். நாம் தீவகத்தில் எமது காரியாலயத்தை ஆரம்பித்த காலம் முதல் மக்கள் சமாதானத்தை வலியுறுத்தி முன்னெடுக்கும் முயற்சிகளில் எமது கட்சியின் பங்களிப்பும் இருந்தது என பது வெளிப்படையான விடயம்.

யார் இத்தாக்குதலை மேற்கொண்டார்கள் என்று விசாரணைக் குழுவுக குத் தெரியாது விட்டாலும் தமிழீழ விடுதலைப் புலிகளுக்குத் தெட்டத்தெளிவாகத் தெரிந்திருக்கும். இது விடயமாக விடுதலைப்புலிகள் எம்முடன் தொடர்புகொள்ள விரும்பினால் நாம் பூரண ஒத்துழைப்பு வழங்கத் தயாராக உள்ளோம் - என்றுள்ளது.(ம)

## மட்டக்களப்பு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இராணுவத் தலைமையகம் வழங்கியுள்ளது. இவரது இடத்திற்கென - 23 ஆவது படைப்பிரிவின் மட்டக்களப்பு மாவட்ட இராணுவக் கட்டளை அதிகா ரியாக - பனாகொட படைத் தளத்தில் கடமையாற்றிய கேணல் ஆர்.டி.சில்வா நியமிக்கப்பட்டுள்ளார்.

இவர் விரைவில் தனது பதவியைப் பொறுப்பேற்கவுள்ளமை குறிப்பிடத்தக்கது. புரிந்துணர்வு உடன்படிகையை மட்டக்களப்பு மாவட்டத்தில் செம்மையாக நடைமுறைப்படுத்துவதற்கு அங்கு தளபதியாக இருந்த அனரிஸ் முட்டுக்கட்டையாக இருந்தார் என்று அவர் மீது குற்றஞ்சாட்டப்பட்டு வந்தது குறிப்பிடத்தக்கது.(ம-12-9)

## நாடாளுமன்றைக்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கலைக்கமாட்டேன் என்று எழுத்து மூலம் உறுதி அளித்து ஜனாதிபதி வழங்கிய கடிதத்தை சபாநாயகர் சபையில் அறிவிப்பார் என்றும் எதிர்பார்க்கப்படுகின்றது. நாடாளுமன்றத்தை தற்றுணிவின்படி கலைக்கும் அதிகாரத்தை ஜனாதிபதியிடமிருந்து பறிக்கும் விதத்தில் அரசமைப்புச் சட்டத் திருத்தம் ஒன்றைக் கொண்டுவர அரசு முயன்றுவரும் இவ்வேளையில-

அந்த முயற்சிக்கு ஜனாதிபதியின் பொதுமக்கள் ஐக்கிய முன்னணியில் உள்ள பல எம்பிக்களும் ஆதரவளிக்க முன் வந்துள்ளனர் என்ற செய்திகள் வெளியான பின்னணியில் -அந்த எம்.பிக்கள் அரசுத்தரப்புக்கு ஆதரவாக மாறுவதைத் தடுக்கும்நோக்கோடு மேற்படி கடிதத்தை ஜனாதிபதி சபாநாயகருக்கு அனுப்பியிருப்பதாகக கருதப்படுகிறது.


G.A.Q., 1st in Com. 2003/2004

கல்வி ஆண்டு

(யாழ்ப்பாணம், பேராதனை பல்கலைக்கழகங்களின் வெளிவாரி)

★ இப்பாடநெறிகளுக்கு A/Lஇல் கலை, வர்த்தகம், விஞ்ஞானம், கணிதம் இவற்றில் 3 பாடம் சித்தி அடைந்தவர்களும், பயிற்றப்பட்ட ஆசிரியர்களும் விண்ணப்பிக்கலாம்.

★ மேற்படி பல்கலைக்கழகங்களுக்கான பதிவுகள் யாவும் எமது நிறுவனத்தினால் செய்துதரப்படும்.

★ இவற்றிற்கான விரிவுரைகள்

ஆரம்பம்: 31.08.2002 (8.00a.m.)

மேலதிக விவரங்களுக்கு:

புதிய உயர் கல்லூரி
ஆரியகுளம் சந்தி,
யாழ்ப்பாணம்.

S.அருள்நங்கை. (7191)



"மோகன்ஸ்"

தமிழ் – ஆங்கில மொழிபெயர்ப்புக்கும், ரைப்பிங், றோணியோ வேலைகளுக்கும் மற்றும் J.P. சம்பந்தமானதும் பொலீஸ் றிப்போட் செய்துகொள்ளவும் நீங்கள் நாடவேண்டியது:

"மோகன்ஸ்" ரைப்பிங் சென்ரர்,
நெல்லியடி.

ஓட்டோ சேவையும் வழங்கப்படும். (7202)



விசேட புலமைப்பரிசில்

2002 A/L பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்கள் யுனிவக் நிறுவனத்தினால் வழங்கப்படும் புலமைப்பரிசிலுக்கான விண்ணப்பங்களை 24.08.2002இற்கு முன்னர் மேற்கொள்ளவும்.

UNIVAC
College of Computer Information Technology

*1201, K.K.S. Road,*
*Narchimar Kovilady, Jaffna.* (7225)

***New Hary's Institute***
***Sithankerny.***



CHEMISTRY CENTRE

கந்தர்மடம்
இணைந்த கணிதம்
A/L 2004
எல்லைகள், வகையீடு
Tue - 5.45 - 6.45 (p.m. - New Time)
ஆரம்பம்: 20.08.2002
செந்தில்நாதன் B.Sc.



திருமறைக் கலாமன்றம்
வழங்கும்
ஸ்பாட்க்கஸ்
(நாடகம்) (C/23585)
ஓகஸ்ட் 30,31 - செப். 1, 2002
(வெள்ளி, சனி, ஞாயிறு)
மன்ற அரங்கில் மாலை 6.45 மணி.



உடன் தேவை

நல்ல நிலையிலுள்ள ஒலிம்பியா ரைப்பிங் மெசின், றோணியோ மெசின் மற்றும் பாவனையிலுள்ள சோமசெற் கார் என்பன உடன் தேவை.

*தொடர்பு:*
S. கணேசன் J.P.
யாழ். வீதி,
நெல்லியடி, கரவெட்டி. (7201)



விற்பனைக்கு

வீட்டுப் பாவனைக்குரிய சகல தளபாடங்களும் மலிவு விலையில் விற்பனைக்கு உண்டு. காலை 6 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை பார்வையிடலாம்.

*தொடர்பு:* S. கணேசன் J.P.
யாழ். வீதி,
நெல்லியடி, கரவெட்டி. (7200)



KINGS ELECTRONICS

Intel Pentium - III 1133 MHz Computer

Intel Pentium - III 1133 MHz Processor with
256 KB Cache Memory :-
- MSI VIA Chipset Board
- 40 GB Hard Disk Drive
- 8 MB VGA Card
- 32 Bit Sound
- 128 SD Ram
- 15" Samsung Color Monitor
- 1.44 MB Floppy Disk Drive
- ATX Tower Case
- 108 Win 98 Keyboard
- Mouse & Pad
- 1200W Soundstar Speaker
- Samsung 52X CD Drive
- Dust Cover

ஒரு வருட உத்தரவாதத்துடன்

57750/=

The above Configuration with
Intel Celeron 1000 Processor 50,900/=
HP 656 COLOR PRINTER 7,900/=

*No 64, Stanley Road, Jaffna*

35CM B/W TV

ஒரு வருட உத்தரவாதத்துடன்

6,750/=

Tamil Audio Cd, Video Cd, Software Cd, Mp3 Cd, T.V, VHSடெக், VCDடெக், MP3 டெக், Table Fan, மற்றும் தரமான எலெக்ரோனிக் பொருட்களுக்கு நாடவேண்டிய ஓரே ஸ்தாபனம்.

கிங்ஸ்
*எலெக்ரோனிக்ஸ்*
*இல 64, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.*

எமது நிறுவனத்திற்கு வேறு கிளைகள் இல்லை.



கோலாகலமான திறப்பு விழா



Safely and Quickly
WESTERN UNION MONEY TRANSFER

இன்று (19.08.2002) திங்கட்கிழமை நண்பகல் 12.05 மணிமுதல் 1.35 மணிவரையுள்ள சுபவேளையில்

வெஸ்டர்ன் யூனியன் பணப் பரிமாற்றம்

வெளிநாடுகளிலிருக்கும் உங்கள் அன்புக்குரியவர்களிடமிருந்து சில வினாடிகளில் பாதுகாப்பாக உங்கள் பணத்தைப் பெற்றிட, யாழ்நகரில் திங்கள் முதல் சனிக்கிழமை (காலை 9.00 மணிமுதல் மாலை 5.00 மணி) வரை.

பெடெக்ஸ்

உங்கள் பொருள்களை விரைவாக விமானம் மூலம் உங்களுக்கு வேண்டிய இடத்துக்கு பாதுகாப்பாக அனுப்ப, இன்னும் அதிக இடங்களையும் அதிக அனுகூலங்களையும் உங்களுக்கு அமைத்துக்கொடுப்பதே எமது கடமை.

FedEx® Express
Mountain Hawk Express

*தொடர்புகளுக்கு :-*

மகாலட்சுமி ஸ்டோர்ஸ்
212, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.
T.P.: 021 - 2024

(C/23218)


இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 19.08.2002இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.